janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 செப்டம்பர் 03 - செப்டம்பர் 09 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 22




# மதவெறியைத் துண்டி தேச ஒற்றுமையை சீர்குலைக்கும் மோடி அரசே! ஆட்சியை விட்டு வெளியேறு!

## ஆக. 30 சென்னை

## இளைஞர்-மாணவர் இந்திய ஒற்றுமை பேரணி

**மதவெறியைத் துண்டி தேச ஒற்றுமையை சீர்குலைக்கும் மோடி அரசே! ஆட்சியை விட்டு வெளியேறு! என்ற முழக்கத்தை வைத்து ஆகஸ்ட் 30ல் சென்னை சைதாப்பேட்டையில் மாபெரும் இளைஞர்-மாணவர் இந்திய ஒற்றுமை பேரணி எழுச்சிகரமாக நடைபெற்றது.**

மணிப்பூரின் மகள்களுக்கு நீதி வழங்கு! இனப்படுகொலையை தடுத்து நிறுத்து!

இந்திய மக்களை பிளவுபடுத்தி, மதவெறியர்களாக்கும் பொது சிவில் சட்டத்தை கொண்டு வராதே!

அரசியலமைப்புச் சட்டத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிராக செயல்படும் ஆர்.எஸ்.எஸ். ரவிஜ திரும்பப் பெறு!

*இந்தி மொழியை திணிக்காதே

மணிப்பூர் கலவரத்துக்கு காரணமான மணிப்பூர் பா.ஜ.க அரசை டிஸ்மிஸ் செய்யக்கோரியும் மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதன் காரணமாக தற்போது அரியானாவிலும் உத்தரகாண்டிலும் கலவரம் நடைபெறுகிறது.

நாடு முழுவதும் மதக்கலவரங்களை திட்டமிட்டு நடத்தும் ஆர்.எஸ்.எஸ்

உள்ளிட்ட சங்பரிவார் கும்பல்களுக்கு பாதுகாப்பு கொடுத்து கலவரமும் படுகொலைகளுக்கும் காரணமான ஒன்றிய பா.ஜ.க அரசே ஆட்சியை விட்டு வெளியேறு எனும் முழக்கங்களுடன் ஆகஸ்ட் 30 புதன் கிழமை அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக்குழுக்கள் சார்பில் இளைஞர் மாணவர்களை ஒருங்கிணைத்து இந்திய ஒற்றுமை பேரணி சென்னை சைதாப்பேட்டை ஐந்து விளக்கு பகுதியில் தொடங்கி சைதாப்பேட்டை குயவர் தெரு வரை நடைபெற்றது.

பேரணியை சுதந்திரப்போராட்ட வீரர் தோழர் ஆர். நல்லகண்ணு அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.









நிர்வாணமாக்கிய
பெண்களால்
நிர்வாணமானது இந்தியா
தேச பக்தி என்ற பெயரில்
கலவரத்தை தூண்டாதே!
அமைதியை களைக்காதே!
தேர்தல் லாபம் பார்க்கவே
கலவரத்தை தூண்டாதே!
சிதைக்காதே சிதைக்காதே!
இந்தியாவின் பன்முகத் தன்மையை
சிதைக்காதே சிதைக்காதே!
மணிப்பூர் மாநில முதல்வரே!
மணிப்பூர் கலவரத்திற்கு
தார்மீக பொறுப்பேற்று
பதவி விலகு!
உடனே விலகு!
வாழவிடு வாழவிடு!
இந்தியாவை அமைதியாக
வாழவிடு வாழவிடு!
வெளியேறு வெளியேறு!
ஆட்சியை விட்டு வெளியேறு!

எனும் முழக்கங்களை விண்ணதிர எழுப்பினர்.



பேரணியின் நிறைவாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஏ.ஐ.ஒய்.எஃப் மாநிலத்தலைவர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, ஏ.ஐ.எஸ்.எஃப். மாநிலத்தலைவர் சீ.தினேஷ் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், இளைஞர் பெருமன்ற அகில இந்திய பொதுச்செயலாளர் இரா. திருமலை, மாநிலச் செயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா ஆகியோர் உரையாற்றினர். ஏ.ஐ.ஒய்.எஃப் தேசியக்குழு உறுப்பினர் எம்.பார்த்தீபன் நன்றியுரையாற்றினார்.

இப்பேரணிக்காக தென் சென்னை சைதாப்பேட்டை முழுவதும் கொடிகளும் தோரணங்களும் தென் சென்னை மாவட்டக்குழு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டதோடு சுவர் விளம்பரங்களும் பரவலாக செய்யப்பட்டிருந்தன.

பேரணியை சுமார் 5000க்கும் மேற்பட்ட இளைஞர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.




கட்சிக் கடிதம்

# கோயபல்ஸ் அண்ணாமலை ஐபிஎஸ்



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**இரண்டாம் உலகப் போருக்கு காரண கர்த்தாவாக திகழ்ந்து, லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்த உலகக் கொடூரன் ஹிட்லரை அறிவீர்கள்.**

அந்த கொடுமைக்கார ஹிட்லருக்கு உடனிருந்து உதவியவன்தான் கோயபல்ஸ். அவன் வாயிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு சொல்லும் பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. பொய்யையே தொழிலாகக் கொண்ட நபர்களைப் பார்த்து கோயபல்சையும் மிஞ்சிடுவான் என்று கூறுவார்கள்.

பாஜகவின் தமிழ்நாட்டுத் தலைவராக கொலுவீற்றிருக்கும் திருவாளர் அண்ணாமலை வெறும் அண்ணாமலை அல்ல ஐபிஎஸ் படித்துத் தேறிய அறிவாளி. கர்நாடக மாநிலத்தில் அதிகாரியாகப் பணியாற்றி பதவியைக் துறந்து, பாஜகவில் இணைந்து கடந்த சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவராவார்.

தோல்விக்குப் பரிசாக, மக்கள் நிராகரித்ததற்குப் பரிசாக, அக்கட்சி அவரை மாநிலத் தலைவராக நியமனம் செய்துள்ளது. மோடி அமித்ஷா கூட்டணிக்கு அண்ணாமலை போன்ற அறிவாளிகள்தான் தேவைப்படுகின்றார்கள்.

தான் படித்த படிப்புக்குரிய மதிப்பளித்து செயல்பட வேண்டியவர், சேரக்கூடாத இடத்தில் சேர்ந்துவிட்ட காரணத்தால் திருவிழா கூட்டத் திருடர்களுக்குத் தலைமை தாங்கி செயல்படுகின்றார்.

காவல்துறை அதிகாரிகள் என்றால் சமூக விரோதிகளைக் கண்டறிந்து, அவர்களிடமிருந்து உண்மைகளைப் பெறக்கூடிய வல்லமை வாய்ந்திட்ட மிகப்பெரிய பொறுப்பு. ஆனால் ஐபிஎஸ் படித்த அண்ணாமலையோ திரும்பத் திரும்ப பொய் ஒன்றையே கக்கி, தான் ஒரு கோயபல்ஸ் என்பதை நிரூபணம் செய்து வருகின்றார். ஆர்எஸ்எஸ் பயிற்சிக் கூடம் கற்றுத் தந்திட்ட பாடத்தை, பொய் என்கிற மாயந்திரத்தை மனப்பாடம் செய்து பிசிறின்றிப் பேசுகிறார்.

தமிழ்நாட்டில் பரபரப்பு அரசியல் பேசி, தன்னிகரில்லா தலைவராகத் திகழ்ந்திட வேண்டுமென விரும்புகிறார். ஊழலுக்கு எதிரானவன் என மார்தட்டுகிறார். யார் ஊழல் செய்தாலும் எதிர்ப்பேன் என்கிறார். அதிமுக ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல் குறித்தும் உரைப்பேன் என்கிறார். ஜெயலலிதாவுக்கு நான் சமமானவன் என்று சவால் விடுகிறார். பின்னர் இவைகளை எல்லாம் வசதியாக மறந்தும் விடுகின்றார்.

பாதயாத்திரை என்றார். மிகுந்த சுகத்தோடு பஸ் யாத்திரை நடத்துகின்றார். தமிழ்நாட்டில் கூட்டணிக்கு பாஜகதான் தலைமை தாங்கும், இதனை ஏற்கவில்லை எனில் கூட்டணி இல்லை என்றார். பின்னர் யார் தலைமை என்பதனை தேசியத் தலைமை முடிவு செய்யும் என்கின்றார்.

காலையில் ஒன்றும் மாலையில் ஒன்றுமாகப் பேசி பிழைப்பைத் தொடர்கின்றார். தான் என்ன பேசுகிறோம், எதற்காகப் பேசுகிறோம், என்ன நோக்கத்திற்காகப் பேசுகிறோம் என்று அறியாத, பிறர் புரிய முடியாத வகையில் ஒரு குடிகாரனை மிஞ்சும் பேச்சாக உள்ளது அண்ணாமலையில் உளறல்கள்.

கொடநாடு பங்களா, காபி தோட்டம், தொழிற்சாலை அனைத்தும் செல்வி ஜெயலலிதாவுக்கு சொந்தமானது என்பது எவரும் அறியாத புதிர் அல்ல. இப்புதிரில் அடங்கியுள்ள பங்களா என்பது வெற்று பங்களா அல்ல மாண்புமிகு முதலமைச்சரின் முகாம் அலுவலகம் என்பதுதான் மிக முக்கியமானது.

ஜெயலலிதா அவர்கள் சென்னையின் வெப்பத்தைத் தாங்க முடியாத காலத்தில் கொடநாடு பங்களாவில் தங்கிப் பணியாற்றுவார். சென்னை கோட்டையில் இருந்து அன்றாடம் கோப்புகளை சுமந்து கொண்டு, அதிகாரிகள் விமானத்தில் பறந்து கொடநாடு பங்களாவுக்கு எடுத்துச் செல்வார்கள். அவற்றில் எத்தனை திரும்பவும் கோட்டைக்கு வந்தன என்பது எவருக்கும் தெரியாது.

அரசின் கோப்புகள், அவரது சொந்த ஆவணங்கள் மற்றும் இதர, இதர எத்தனையோ மர்மங்களைக் கொடநாடு பங்களா அடைக்கோழி போல் பாதுகாத்து வந்தது.

அத்தகைய பங்களாவில் கொள்ளை நடந்தது. அதனைக் கண்ட காவலரும் கொல்லப்பட்டார். ஜெயலலிதாவின் கார் டிரைவரும் மர்மமான முறையில் மரணித்தார்.

கார் டிரைவரின் சகோதரர், இவற்றையெல்லாம் செய்யச் சொன்னது எடப்பாடி பழனிச்சாமிதான் என எனது தம்பி கூறினான் என்று பகிரங்கமாக கூறியுள்ளார்.

முதலமைச்சரின் முகாம் அலுவலகத்தில் கொள்ளையும், கொலையும் நடந்தது குறித்து யோக்கியர் அண்ணாமலை வாய் திறக்க மறுத்து மவுனம் சாதிப்பது ஏன்?

தடை செய்யப்பட்ட குட்கா பறிமுதல் செய்யப்பட்ட குடோனில் இருந்து கைப்பற்றப்பட்ட டைரியில், குட்காவை தங்கு தடையின்றி விற்பனை செய்திட யார், யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்கிற முழு விவரங்களும் உள்ளன. அன்றைய அதிமுக அமைச்சர் பெருமக்கள், காவல்துறை உயர் அதிகாரிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகைய ஊழல் முறைகேடு, பணப் பரிவர்த்தனை குறித்து, ஊழலை ஒழிக்கப் புறப்பட்ட யோக்கியவான் அண்ணாமலை பேசாமல் வாய்மூடி மவுனியாக இருப்பது ஏன்?

நீட் நுழைவுத் தேர்வுக்கு பயந்து பல பேர் மரணம் அடையக் காரணமாக இருந்த முதல் குற்றவாளி மு.க.ஸ்டாலின், இரண்டாவது குற்றவாளி உதயநிதி ஸ்டாலின் என குற்றம்சாட்டும் அண்ணாமலை அறிந்து பேசுகிறாரா? அறியாமல் உளறுகிறாரா?




எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோதுதான் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் டெல்லிக்குப் பறந்து, பறந்து சென்று பிரதமரையும் உள்துறை அமைச்சரையும் சந்தித்து விதிவிலக்கு கோரி வந்தனர்.

ஒவ்வொரு முறையும் ஒன்றிய அமைச்சர்களை சந்தித்து விட்டு புன்முறுவல் பூக்க பத்திரிகையாளர்களை சந்தித்து, பிரதமரைப் பார்த்தோம்; உள்துறை அமைச்சரைப் பார்த்தோம்; அவரைப் பார்த்தோம்; இவரைப் பார்த்தோம்; விதிவிலக்கு நிச்சயமாக கிடைத்துவிடும் என்று பேட்டியளித்தனர்.

இன்றைய ஒன்றிய நிதியமைச்சர் அன்றைய இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், ஜல்லிக்கட்டுக்கு அவசரச் சட்டம் நிறைவேற்றியது போல், நீட் நுழைவுத் தேர்வுக்கும் ஓர் அவசரச் சட்டம் பேரவையில் நிறைவேற்றுங்கள். விதிவிலக்கு வழங்கி விடுகின்றோம் என்றார்.

ஆனால் அடுத்த நாள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த போது, ஒன்றிய அரசின் வழக்கறிஞர் ஒரு மாநிலத்திற்கு மட்டும் விதிவிலக்கு அளிக்க முடியாது என்று அழுத்தம் திருத்தமாக வாதிட்டார். ஒன்றிய அரசின் உறுதிப்பாட்டை உறுதி செய்து, தமிழ்நாட்டிற்கு மட்டும் விதிவிலக்கு அளிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்புக்குப் பின்னர் தான் அரியலூர் அனிதா மரணத்திற்கு (கொல்லப்பட்டார்) தள்ளப்பட்டார்.

அண்ணாமலையாரே, யார் குற்றவாளி?

ஒன்றிய அரசு நினைத்தால் நீட் நுழைவுத்தேர்வை முற்றிலுமாக ரத்து செய்ய முடியுமா? முடியாதா? முற்றிலுமாக வேண்டாம்; தமிழ்நாட்டிற்கு விதிவிலக்கு அளிக்க முடியுமா? முடியாதா? என்பதனை அண்ணாமலை அறிவுபூர்வமாக பதில் சொல்ல வேண்டும்.

நீட் நுழைவு தேர்வுக்கு அஞ்சி, தமிழ்நாட்டில் தான் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பிற மாநிலங்களில் இது போன்று இல்லை என்று கூறுகின்ற அண்ணாமலை, அன்றாடம் செய்திகளைப் பார்ப்பதும் படிப்பதும் அரிது போல் தெரிகின்றது.

ராஜஸ்தான் மாநிலம் இந்தியாவில்தான் இருக்கின்றது. நாட்டின் போட்டித் தேர்வு பயிற்சி தலைநகரமாக இந்த ராஜஸ்தான் மாநிலத்தின் கோட்டா நகரம் திகழ்கிறது. இங்கு நூற்றுக்கணக்கான பயிற்சி மையங்கள் உள்ளன. ஆண்டுதோறும் இரண்டு லட்சம் மாணவர்கள் ஜே.இ.இ, நீட் தேர்வுகளுக்கான பயிற்சி பெறுகிறார்கள். இவர்களில் மன அழுத்தம் காரணமாக கடந்த ஆண்டு 15 மாணவர்களும் நிகழாண்டில் இதுவரை 22 மாணவர்களும் தற்கொலை செய்து இறந்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் நான்கு மணி நேரத்தில் இரண்டு மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தான் பயிற்சி பெறும் மையத்தில் மாதிரி நீட் தேர்வை எழுதி முடித்து வெளியே வந்த சம்பானி காஸ்லே என்ற 17 வயது மாணவர், தான் பயின்ற மையத்தின் ஆறாவது மாடியில் இருந்து கீழே குதித்து மாண்டு போனார். ஆதர்ஷ் ராஜ் என்ற 18 வயது மாணவர் தான் தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்பில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதன் விளைவாகப் பயிற்சி மையங்களில் நடைபெறும் தேர்வை இரண்டு மாதங்களுக்கு நடத்தக் கூடாது என்று அம்மாநில அரசு தடை விதித்துள்ளது.

பெற்றோர்கள் கடன் வாங்கிப் படிக்க வைக்கிறார்கள். அதன் மன அழுத்தம் காரணமாக மாணவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். கல்விக்காக கடன் வாங்கத் தேவையில்லாத வகையில் கொள்கையை ஒன்றிய அரசு தான் உருவாக்க வேண்டும் என அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் மகேஷ் ஜோஷி தெரிவித்துள்ளார். இவையெல்லாம் அண்டப்புளுகு அண்ணாமலைக்குத் தெரியாதா?

வேளாண் மக்களுக்கு எதிராக மூன்று சட்டங்களை ஒன்றிய அரசு அவசர அவசரமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றி, அடுத்த நாளே குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அரசிதழிலும் வெளியிட்டு சட்டம் ஆக்கினீர்கள்.

அரசியல் கட்சிகள், விவசாய சங்கங்கள் கடுமையாக எதிர்த்தன. தமிழ்நாடு சட்டப்பேரவை மற்றும் கேரளா சட்டப்பேரவையில் மூன்று சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டுமென தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எவரது குரலுக்கும் செவி சாய்க்காத நீங்கள், என்ன சொன்னீர்கள்? "நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் கமா, ஃபுல் ஸ்டாப் கூட திருத்தப்பட மாட்டாது" என அகங்காரமாகப் பதிலளித்தீர்கள்.

ஒண்ணே கால் ஆண்டு விவசாயிகள் போராட்டத்திற்குப் பின்னர், 700 விவசாயிகள் செத்து மடிந்ததற்குப் பின்னர், மூன்று சட்டங்களையும் ஒன்றிய அரசு ரத்து செய்ததை நாடு மறக்கவில்லை. நீட் நுழைவுத் தேர்வில் இருந்து விதிவிலக்கு அளிப்பதற்கான மசோதா, சட்டப்பேரவையில் அதிமுக ஆட்சிக் காலத்திலும் நிறைவேற்றப்பட்டது. திமுக ஆட்சிக்கு வந்தவுடனும் நிறைவேற்றப்பட்டது. அவை குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்காக ஆண்டுக் கணக்கில் காத்துக் கிடக்கின்றன. அண்ணாமலையாரே, இப்போது சொல்வீர் யார் குற்றவாளி? தமிழகத்து மாணவர்களின், மாணவிகளின் மரணத்துக்கு காரணம் யார்?

விவசாயிகளுக்கு எதிரான சட்டத்தை ரத்து செய்தது போல், நீட் தேர்வை ஏன் விலக்க முடியாது?

திருவாரூரில் எம்.செல்வராசு எம்பி மகள் திருமணத்தை நடத்தி வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரை முழுவதும் ஜனசக்தியில் இடம்பெற்றுள்ளது. அவர் ஆற்றிய உரை தமிழகத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் செல்லும் இடமெல்லாம் ஊழல் குறித்துப் பேசி வருகின்றார். சிஏஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றுள்ளது. இதற்கு பதில் என்ன? ஊழல் குறித்து பேசுவதற்கு மோடிக்கு அருகதை உண்டா? என்பதே முதல்வரின் கேள்வியாகும்.

உடனே அறிவில் சிறந்தவராக தன்னைத்தானே கருதிக் கொள்ளும் அண்ணாமலையார் பதில் கூற முற்படுகின்றார். அவரது பதில் என்ன? சிஏஜி அறிக்கை நெடுஞ்சாலை

தொடர்ச்சி 4ம் பக்கம்

## மணிப்பூரை மறுகட்டமைப்பு செய்திட

# குடியரசு தலைவரிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனைகள்

**மணிப்பூரில் உருவான கலவரம், படிப்படியாக மாநிலம் முழுக்கப் பரவி, மிக நவீன ஆயுதங்களைக் கொண்டு போரிடும் அளவுக்கு உள்நாட்டுப் போராக வடிவெடுத்தது. நாட்டின் கவனத்தை மட்டும் இன்றி, உலகத்தின் கவனத்தையே தன் பால் ஈர்த்தது. நான்கு மாதங்களையும் தாண்டி இன்னும் புகைந்து கொண்டு தான் இருக்கிறது.**



இரண்டு பெண்களை முற்றாக ஆடை களைந்து வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடுமை, காணொளியாக வெளியிடப்பட்ட பின்பு இந்திய மக்களின் மனசாட்சியை அது உலுக்கி எடுத்தது.

மணிப்பூருக்கு வெளியில் இருந்து முதல் தடவையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் இந்திய மாதர் தேசிய தமிழகத்தின் பொதுச்செயலாளருமான ஆனி ராஜா தலைமையில் ஒரு குழு உண்மை கண்டறிவதற்காக மாநிலத்துக்குள் சென்றது. மக்களைச் சந்திக்க விடாமல் தடுப்பதற்கு மாநில அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. அதையும் தாண்டி அனைத்து சமூக பிரிவுகளைச் சேர்ந்த மக்களுடன் அவர்கள் பேசி திரும்பி வந்தனர். அதற்காக தேசத் துரோகம் உள்ளிட்ட வழக்குகளை மணிப்பூர் மாநில அரசு அவர்கள் மீது தொடுத்தது.

தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழுச் செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி, தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சந்தோஷ்குமார் எம்.பி, மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே சுப்பராயன் எம்.பி, மற்றும் மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மணிப்பூருக்கு சென்று நிவாரண முகாம்களை பார்த்து, மக்களிடம் பேசி திரும்பி வந்தனர். அவர்களது அனுபவங்களை நாடாளுமன்றத்திலும் எடுத்துரைத்தனர்.

மணிப்பூர் அரசு அங்கு ஏற்படும் நிகழ்வுகளை வெளிப்படையாக பேச மறுப்பதாலும், இணையதள சேவையை முற்றாக நிறுத்தி, மணிப்பூர் மக்கள் வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள விடாமல் தடுப்பதாலும், மீண்டும் மீண்டும் மாநிலத்திற்கு வெளியில் இருந்து உள்ளே சென்று நிலைமையை கண்டறிவதும், அதனை நாட்டின் மக்களுக்கு தெரியப்படுத்துவதும், உரிய தீர்வு காண முயற்சிகளை மேற்கொள்வதும் கம்யூனிஸ்டுகளின் கடமையாகிறது.

எனவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா தலைமையிலான ஐந்து பேர் கொண்ட தூதுக்குழு 2023 ஆகஸ்ட் 21 முதல் 24 ஆகஸ்ட் 2023 வரை மணிப்பூருக்குச் சென்றது.

கடந்த 4 மாதங்களாக மணிப்பூரில் இருந்து வரும் அறிக்கைகள் ஒட்டுமொத்த தேசத்தையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளன. களநிலவரத்தை கண்டறியவும், அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் இந்த தூதுக்குழு மணிப்பூர் மாநிலத்திற்கு சென்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு செயலாளர்கள் பினாய் விஸ்வம் எம்.பி., டாக்டர் கே. நாராயணா, ராம கிருஷ்ண பாண்டா மற்றும் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த கட்சியின் மூத்த பெண் தலைவர் அசோமி கோகோய் ஆகியோர் இந்த குழுவில் இடம் பெற்று இருந்தனர்.

இந்தக் குழு, மணிப்பூரில் அனைத்து இனக்குழுக்களும் வாழ்கிற பகுதிகளுக்குச் சென்று, சமூகத்தின் அனைத்துப் பிரிவினருடனும் உரையாடல் நிகழ்த்தியது. பல்வேறு இன சமூகங்களுக்கிடையில் உருவாக்கப்பட்ட பிரிவினையையும், பிளவுகளையும் தூதுக்குழு நேரடியாகக் கண்டது. மாநிலத்தில் வன்முறையால் இதுவரை 180 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 4800 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு சமூகங்களுக்குரிய 733 வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டன. 55,000 க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கும் மேலாக நடந்த வன்முறைகளுக்குப் பிறகும், ஒரு கொடூரமான நிகழ்வின் காணொளியை வெளியிட்ட பின்பு தான், மணிப்பூர் குறித்து பிரதமரைப்பேசவைக்கமுடிந்தது என்றநிலை கண்டு மணிப்பூர் மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். பிரதமரின் நீண்டகால மௌனமும், கலவரத்தால் பாதிக்கப்பட்ட மாநிலத்திற்குச் செல்லாமலேயே தவிர்த்து விட்டதும், ஜனநாயக அமைப்புகளின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைத்துவிட்டது.

தூதுக்குழு பல அரசியல் கட்சிகள், சமூகங்கள், பெண்கள் அமைப்புகள், குடிமைச் சமூகக் குழுக்கள், ஆர்வலர்கள், கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் ஈடுபட்டுள்ள மக்களைச் சந்தித்தது. நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள, ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த மாநிலத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கில் விரிவான விவாதங்களை நடத்தியது.

தூதுக்குழு பல நிவாரண முகாம்களையும் பார்வையிட்டது. இந்த முகாம்களில் செய்து தரப்பட்டுள்ள ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை. குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களின் அடிப்படை தேவைகளை கூட நிறைவு செய்வதாக அவை அமையவில்லை.

மாநிலத்தின் கல்விச் சூழல் சீர்குலைந்து, இளைய தலைமுறையினரின் எதிர்கால வாய்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் வர்த்தகம், அபினி சாகுபடி, நிலம், காடுகள் மற்றும் இயற்கை வளங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் அச்சம் தெரிவித்தனர். சட்டவிரோத குடியேற்றம் மற்றும் எல்லையில் வேலி அமைத்தல் போன்ற பிரச்சனைகள் குறிக்கும் மக்கள் முறையீடு செய்தனர்.

தூதுக்குழு மணிப்பூர் கவர்னர் திருமதி அனுசுயா உய்கே அவர்களைச் சந்தித்து, மணிப்பூர் எதிர்கொள்ளும் துயரங்களைப் பற்றிய விவரங்களை அவரிடம் எடுத்துரைத்தது. அனைத்து இடங்களிலும் அமைதி, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள் விடுத்தது.

நாடு திரும்பிய பின்னர் ஆகஸ்ட் 29ஆம் தேதி அன்று இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை டி.ராஜா தலைமையில் நேரில் சந்தித்து, மணிப்பூரில் தான் நேரடியாக கண்டு உணர்ந்த விவரங்களை எல்லாம் தூதுக்குழு விரிவாக விளக்கியது. மேலும் ஒன்றிய மாநில அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் நடவடிக்கைகள் குறித்த கோரிக்கையை எழுத்துப்பூர்வமாக குடியரசு தலைவரிடம் அளித்தது.

ஒன்றியத்திலும் மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி அமைந்தால், அது இரட்டை எஞ்சின் ஆட்சி என்றும், அந்த மாநிலம் வெகுவேகமாக முன்னேறும் என்றும் பாஜக அரசு தொடர்ந்து பேசி வந்தது. மாநிலத்தில் பாஜக ஆட்சியின் அராஜகத்தைக் கண்ட கர்நாடக மக்கள் அதனை ஆட்சியில் இருந்து வெளியேற்றினர். பாஜக கூறியது எவ்வளவு பெரிய பொய் என்பதை மணிப்பூர், ஹரியானா நிகழ்வுகள் நமக்கு எடுத்துரைத்துள்ளன.

நாட்டிலும் மாநிலத்திலும் அமைதி நிலவுவதற்கு, பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பதற்கு, குறைந்தபட்சம் இருப்பதைக் காட்டிலும் மேலும் நலிவுக்கு ஆகாமல் தடுப்பதற்கு பாஜக ஆட்சியை மத்தியிலும் மாநிலத்திலும் வரவிடாமல் தடுப்பது சரியான வழி ஆகும்.

**தொகுப்பு டி.எம்.மூர்த்தி**

### குடியரசு தலைவரிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வைத்த வேண்டுகோளும், கோரிக்கைகளும்

மணிப்பூரில் பல்வேறு கருத்தோட்டங்களை கொண்ட மக்களிடம் விரிவான உரையாடல்களையும் விவாதங்களையும் நிகழ்த்திய பிறகு, மணிப்பூர் மக்களின் துயரங்களையும் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது.

மாநில மக்கள் மத்தியில் ஏற்பட்ட மன பிளவுகளையும் அதன் தொடர்ச்சியாக இருந்த கொடூரமான வன்முறைகளையும் கட்டுப்படுத்துவதில் ஒன்றிய, மாநில அரசுகள் தோல்வியடைந்து விட்ட நிலையில், ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு சமூகத்தினர் ஆதிக்கம் செலுத்தும் பகுதிகளுக்குள் செல்லவே முடியாத அளவுக்கு பெரும் பிரிவினை ஏற்பட்டு விட்டது. மணிப்பூரில் உள்ள சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் ஈடுபடுத்தி, இந்தத் தகராறுகளை முடிவுக்கு கொண்டு தீர்வு காண்பதற்கு உடனடி அரசியல் முன்முயற்சி தேவைப்படுகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தூது குழுவிடம் மக்கள் எழுப்பிய முக்கிய கோரிக்கைகள் பின்வருமாறு:

- ◆ மணிப்பூர் சட்டப்பேரவையில் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுவதை பொருத்தமான வழியில் உறுதி செய்ய வேண்டும்.
- ◆ என்.பிரேன் சிங்கின் அரசு மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டதால், அவரை முதல்வர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.
- ◆ மணிப்பூரில் அமைதி மற்றும் இயல்பு நிலை திரும்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ◆ முட்டுக்கட்டையை உடைக்க சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும், அரசியல் கட்சிகளையும், குடிமைச் சமூகக் குழுக்களையும் அழைத்து பேசி, அவர்களின் கருத்துக்களை பதிவோடு பரிசீலித்து தீர்வு காண்பதை நோக்கிய உரையாடல் தொடங்கப்பட வேண்டும்.
- ◆ அனைத்து குழுக்களிடமிருந்தும் ஆயுதங்களை முற்றாக களைவதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எந்தவித பாகுபாடும் இல்லாமல், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான சிறப்புத் திட்டம் வகுத்து செயல்படுத்த வேண்டும்., வன்முறை, தீவைப்பு, இடம்பெயர்வு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
- ◆ வன்முறை, தீவைப்பு மற்றும் இடப்பெயர்வுகள் மாநிலம் முழுவதும் வாழ்வாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் போதுமான வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட வேண்டும்.
- ◆ பாலியல் பலாத்காரம், கொலை, வன்முறைகளில் ஈடுபட்ட, ஈடுபடுகிற அனைத்து குற்றவாளிகள் மற்றும் மற்றும் அவர்களுக்கு துணை நிற்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ◆ கல்வி நிறுவனங்களில் இயல்பு நிலையை ஏற்படுத்த உடனடி செயல்பாடு அவசியம். எந்த ஒரு மாணவரும் கல்வியில் இருந்து விலக்கப்படக்கூடாது. இணையதள வசதியை உடனடியாக மீட்டெடுத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.
- ◆ பெண்களின் பாதுகாப்புக்காக தனி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- ◆ நிவாரண முகாம்களிலும் வெளியிலும் உள்ள மக்களுக்கு தடையின்றி மருந்துகள் மற்றும் மருத்துவ சேவைகள் வழங்கப்பட வேண்டும். பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களின் சிறப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். ஹீமோபிலியா, புற்றுநோய், சிறுநீரக கோளாறுகள், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- ◆ கலவரத்தை சரியாக கையாளத் தவறிய என்.பிரேன் சிங் தலைமையிலான நிர்வாகத்தை விமர்சித்ததற்காக, ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், அறிவுஜீவிகள் உள்ளிட்டோரைக் கட்டுப்படுத்த, மணிப்பூர் அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. உண்மை கண்டறியும் பணிக்காக மணிப்பூருக்குச் சென்ற இந்திய மாநில தேசிய சம்மேளன ஆர்வலர்களுக்கு எதிரான எஃப்ஐஆர் உட்பட, அனைத்து முதல் தகவல் அறிக்கைகளும் உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும்.

நீங்கள் நிலைமையை பரிவோடு பார்ப்பீர்கள் எனவும், மணிப்பூர் மாநிலத்தில் பொது அமைதி, நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த தங்கள் அரசாங்கம் விரைந்து செயல்படும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்பார்க்கிறது. சமூக பிளவுகளுக்கு, மணிப்பூர் மக்கள் கொடூரமாக பலியாக்கப்பட்டுள்ளனர். மனம் திறந்த உரையாடல், அரசியல் முன் முயற்சிகளளால், அவர்களுக்குத் தேவையான நம்பிக்கையைத் தருவதால் மட்டுமே மணிப்பூரை மறுபடியும் கட்டியெழுப்ப இயலும்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 22

# ஜம்மு காஷ்மீர் மாநில உரிமை மீட்டெடுக்கப்படும்!

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாக மாற்றியது பற்றிய வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சந்திரசூட் உள்ளிட்ட ஐந்து நீதிபதிகள் அமர்வின் முன்பு நடந்து வருகிறது.

நாட்டின் பாதுகாப்பு நலன்களை முன்னிட்டு இவ்வாறு செய்ததாக ஒன்றிய அரசு வழக்காடியது. அதனைக் கேட்ட நீதிபதிகள் “பாதுகாப்பை போலவே இந்திய நாடு உயிர் பிழைத்து இருப்பதற்கு ஜனநாயகத்தை மீட்டெடுப்பதும் சமமான முக்கியத்துவம் கொண்டது அல்லவா” என்று கேட்டனர்.

இயல்பு நிலை திரும்பியதும், லடாக் தவிர்த்து, ஜம்மு காஷ்மீர் மீண்டும் மாநிலமாக மாற்றப்படும் என்று அரசு பதில் அளித்தது. “அதற்கு ஏதும் காலக்கெடு இல்லையா? எப்போது திரும்ப மாநிலமாக உருவாக்கப்படும்“ என நீதிபதிகள் கேட்டனர்.

அரசியல் அமைப்பு சட்டத்தில் மூன்றாவது பிரிவு ஒரு மாநிலத்தின் எல்லைகளை மாற்றியமைக்கவும், பெயரை மாற்றவும், புதிய மாநிலத்தை உருவாக்கவும், ஒரு மாநிலத்தை இரண்டாக பிரிக்கவும், மாநிலத்தின் ஒரு பகுதியைப் பிரித்து அதனை யூனியன் பிரதேசமாக்கவும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

ஆனால் அரசியல் சாசனம் அங்கீகரிக்காத வகையில், ஜம்மு காஷ்மீர் மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாக முதல் முறையாக பிரிக்கப்பட்டது.

ஒரு மாநில அரசுக்கு, சட்டத்துக்கு உட்பட்டு அந்த மாநிலத்தை ஆளுவதற்கான உரிமையுண்டு ஆனால் யூனியன் பிரதேசத்தின் ஆளுகைக் கட்டுப்பாடு ஒன்றிய அரசின் கைகளுக்கு வந்து விடுகிறது.

ஜம்மு காஷ்மீரை யூனியன் பிரதேசங்கள் ஆக்கியது சரி என்றால், இந்தியாவின் மற்ற மாநிலங்களையும் இரண்டாகப் பிரித்தோ அல்லது மொத்தமாகவோ யூனியன் பிரதேசமாக மாற்றிவிட நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றே பொருளாகும். அதாவது மாநில அரசுகளே இல்லாத ஒரே ஒன்றிய அரசு!

அரசியலமைப்புச் சட்டத்தின் முதலாவது பிரிவு இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று வரையறுக்கிறது. மாற்றி அமைக்கப்படக்கூடிய மாநிலங்களின், மாற்ற முடியாத ஒன்றியம் என்பதும் சரியானதே! அதே நேரத்தில் இந்தியா மாநிலங்களின் ஒன்றியமாகவும் இருந்தாக வேண்டும்.

மாநிலத்தை விருப்பப்படி மாற்றி அமைப்பது என்பது “மாநிலங்களின் ஒன்றியம்“ என்ற இந்தியாவின் கருத்தாக்கத்தையே சிதைப்பதாக அமைந்து விடக்கூடாது.

கூட்டமைப்பு என்ற சொல் அரசியல் சாசனத்தில் இல்லாவிடினும், கூட்டாட்சி முறைதான் இந்தியாவின் அடிப்படைக் கட்டமைப்பு. நாடாளுமன்றம் இதனை மாற்றியமைத்தோ அல்லது குடியரசின் கூட்டாட்சித் தன்மையை ரத்து செய்தோ சட்டம் இயற்ற முடியாது.

கேசவானந்த பாரதி வழக்கில் அடிப்படை கட்டமைப்புக் கொள்கையை பற்றி விரிவான தீர்ப்பு வெளிவந்துள்ளது. இந்த வரையறைகள் இல்லை என்றால் இந்திய அரசியல் வர்க்கம், அரசியல் சாசனத்தை அடையாளம் காண முடியாத அளவுக்கு மாற்றி இருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். எனவே நாட்டின் அரசியல் சாசனத்தையும் மாற்றி அமைப்பதற்கு நாடாளுமன்றத்திற்கு வானளாவிய அதிகாரம் உண்டு என்றும் சிலர் பேசுகிறார்கள்.

ஆனால் இந்திய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் அவர்கள் சார்ந்த கட்சியின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர்கள். அந்தக் கட்சியின் முடிவிலிருந்து விலகி அவர்களால் நாடாளுமன்றத்தில் விவாதிக்கவோ, வாக்களிக்கவோ முடியாது. பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட கட்சி தான் அரசாங்கத்தை நடத்துகிறது. எனவே அது வைப்பது தான் சட்டம். மேற்கு நாடுகளின் நாடாளுமன்றங்கள் வேறு மாதிரியானவை. அங்கு ஒரு உறுப்பினர் தனது கட்சியின் நிலை எதுவாக இருந்தாலும், தான் சரி என்று கருதுவதை விவாதிக்கவும் அதன்படி வாக்களிக்கவும் உரிமை உள்ளவர்கள்.

நமது நாட்டைப் பொறுத்தவரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்குபவர்களே அல்ல. மாறாக சட்டங்களை அங்கீகரிப்பவர்கள் என்ற நிலையில் தான் வைக்கப்பட்டுள்ளார்கள். அதாவது யாரோ ஒருவர் எழுதி வைக்கும் மசோதாவை, அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தால் ஆதரிக்க மட்டுமே முடியும்.

டெல்லி யூனியன் பிரதேசத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு, அதன் கீழ் பணி புரியும் அதிகாரிகளுக்கு உத்தரவிட அதிகாரமில்லை என்று அண்மையில் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட போது, மாநில உரிமைகளைப் பேசும் கட்சிகளான அதிமுக, பாமக போன்ற கட்சிகள் மட்டும் இன்றி, இளையராஜாவும் ஓடோடிப் போய் ஆதரித்து வாக்களித்ததை மறந்துவிட முடியாது.

அரசியல் சாசனத்தின் வழியில், ஜம்மு காஷ்மீர் மீண்டும் மாநிலமாக உருப்பெறும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

நீதிபதிகளே சொல்லி இருப்பது போல, மற்ற எல்லா விவாதங்களையும் தாண்டி. ஜனநாயகத்தை பாதுகாப்பது தான் நாட்டின் அதிமுக்கிய கடமையாகும். அதனை அரசாங்கம் செய்யத் தவறினால், மக்கள் செய்து முடிப்பார்கள்.

2ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பதில் செலவினங்கள் அதிகமாகி இருக்கிறது என்று தான் கூறியுள்ளது. ஊழல், முறைகேடு, மோசடி என்று கூறவில்லை என முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்கிறார் அண்ணாமலை. இதற்கு ஆமாம் சாமி போடுகின்றார் தொடை நடுங்கி எடப்பாடி பழனிச்சாமி. சிஏஜி என்றால் என்ன என்பது குறித்த முழு விவரங்களும் ஐபிஎஸ் அதிகாரியான அண்ணாமலைக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஒன்றிய, மாநில, யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் வரவு செலவு கணக்குகளை சரிபார்க்கும் அதிகாரத்துடன், இந்திய அரசமைப்பு சட்டப்பிரிவு 5ன் கீழ் நிறுவப்பட்ட ஓர் அதிகார அமைப்பு சிஏஜி. இது மோடி அமைத்த அமைப்பு அல்ல, அரசமைப்பு சட்டத்தால் அமைக்கப்பட்ட, சுதந்திரமாக செயல்படக்கூடிய இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் அமைப்பாகும்.

இத்தகைய உயர்ந்த பட்ச அமைப்பு கடந்த ஒன்பது ஆண்டு கால பாசிச பாஜக ஆட்சியின் ஏழு திட்டங்கள் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கை முன்வைக்கப்படும். நாடாளுமன்றம் அதனை ஏற்று குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு பிறகு அது மீண்டும் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அதில் ஒரு பிரதி சிஏஜிக்கு அனுப்பி வைக்கப்படும். இதனை தணிக்கை செய்து, அந்த அறிக்கை குடியரசுத்தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதாவது, குடியரசுத் தலைவர் கொடுத்திட்ட வரவு செலவு அனுமதி சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதனைக் கண்காணித்து அறிக்கை கொடுப்பது சிஏஜியின் பணியாகும். அவ்வாறு கொடுக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு சிஏஜி அறிக்கை, ஏழு திட்டங்களில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதை அம்பலப்படுத்தியுள்ளது.

### 1, பாரத் மாலா திட்டம்

நாடு முழுவதும் உள்ள சாலைகள், நெடுஞ் சாலைகள், விரைவுச் சாலைகளை இணைக்கும் திட்டம். இதன் முழு முதல் கட்டத்தில் 34,800 கிலோமீட்டர் சாலை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கென ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்த தொகை 5 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாயாகும். (கிலோ மீட்டருக்கு ரூ. 15.37 கோடி) இதில், 26,316 கி.மீ. சாலை அமைக்க 8 லட்சத்து 46 ஆயிரத்து 588 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன. ஒரு கிலோ மீட்டருக்கு 32.17 கோடி ரூபாய் அதிகமான தொகை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எந்த அமைப்பின் அனுமதியும் இன்றி ஒப்பந்தம் வழங்கப்பட்டதற்கு பெயர் ஊழல், முறைகேடு இன்றி வேறென்ன அண்ணாமலையாரே? ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் 16.80 கோடி முறைகேடு நடந்துள்ளதை சிஏஜி அம்பலப்படுத்தியுள்ளது. இதனை அறிவாளி அண்ணாமலை மறுக்கின்றாரா?

### 2 துவாரகா விரைவுப்பாதை

அரியானாவில் 18.9 கிலோ மீட்டர் தொலைவுக்கும் டெல்லியில் 10.1 கிலோ மீட்டர் தொலைவுக்கும் அதாவது, 28.10 கிலோ மீட்டர் தூரத்திற்கு எட்டு வழிச் சாலை அமைத்திட, கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூ. 18 கோடி என மதிப்பீடு செய்து நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 250 கோடி ஒதுக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் 232 கோடி ரூபாய் வாரி வழங்கப்பட்டதை சிஏஜி அம்பலப்படுத்தியுள்ளது. இதற்குப் பெயர் முறைகேடு, ஊழல் இல்லாமல் வேறு என்ன அண்ணாமலை?

### 3, தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள்

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கச்சாவடிகளில் பயணிகளிடம் கட்டணம் வசூல் செய்கின்றது. நாடு முழுவதும் உள்ள இந்தச் சுங்கச்சாவடிகளில், ஐந்து சுங்கச்சாவடிகளை மட்டும் சிஏஜி ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது. இதில் வாகன ஓட்டிகளிடமிருந்து விதிமுறைகளை மீறி ரூ. 136 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது என சிஏஜி அறிக்கை தெரிவித்துள்ளது. ஐந்து சுங்கச்சாவடிகளில் மட்டும் ரூ.136 கோடி என்றால், ஒட்டுமொத்த சுங்கச்சாவடிகளில் பொதுமக்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட தொகை எத்தனை ஆயிரம் கோடி? அண்ணாமலை வாய் திறப்பாரா?

### 4, ஆயுஷ்மான் பாரத் திட்டம்

ஒன்றிய அரசின் மருத்துவக் காப்பீடு 2018ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இவ்வாண்டு ஆகஸ்ட் மாத நிலவரப்படி 24.3 கோடி மருத்துவ காப்பீடு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 7.5 லட்சம் அட்டைகள் ஒரே அலைபேசி எண்ணை கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த எண் 99 999 99 999 இந்த விவிஐபி யார் சார், அண்ணாமலை பதிலளிப்பாரா?

இது மட்டுமல்ல, சிகிச்சை பெற்றவர்களில் 88,760 பேர் இறந்துவிட்ட நிலையில், இறந்த பின்னரும் சிகிச்சை அளித்ததாக கூறி 2,14,923 அட்டைகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ரமணா திரைப்படம் நினைவுக்கு வருகின்றதா?

செத்தவருக்கு சிகிச்சை அளித்து சாதனை படைத்துள்ள அரசு, உலகத்தில் ஒரே அரசு மோடி அரசு தான் என்பதனை அண்ணாமலை மறுக்கின்றாரா?

### 5, அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்

கடவுள் ராமர் பெயரால் அடித்த கொள்ளையை அம்பலமாக்கி உள்ளது சிஏஜி. அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து தரைமட்டமாக்கி, மதச்சார்பின்மை கொள்கையை ஆழக் குழி தோண்டிப் புதைத்திட்ட கூட்டம், ராமரின் பெயரால் மேம்பாட்டுத் திட்டம் என்று கூறி ஒப்பந்ததாரர்களிடம் உத்தரவாதத் தொகை குறைவாக வாங்கப்பட்டது மட்டுமல்ல, அவர்கள் பெற்ற லாபம் 9.73 கோடி ரூபாய். அரசுக்கு 8.22 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக சிஏஜி அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. ராமா, ராமா என்று கூறி கடவுளின் பெயரால் கொள்ளை அடித்த வேடதாரிகள்.

### 6, பிற திட்டங்கள்

கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்ட நிதியிலிருந்து மோடி அரசுக்கு விளம்பரம் செய்திட 2.44 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

### 7, இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் எச்ஏஎல்

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் விமான எஞ்சின் வடிவமைப்புத்திட்டத்தின் குளறுபடிகள், உற்பத்தியில் தாமதம் ஆகியவற்றின் காரணமாக ரூ. 159 கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என சிஏஜி அறிக்கை கூறுவதை முறைகேடுகள் இன்றி, ஊழல் இன்றி தூய்மை என்று கூற வேண்டுமா அண்ணாமலையாரே?

சிஏஜி அறிக்கைக்குப் பதில் கூற முந்திரிக் கொட்டையாய் அண்ணாமலை முந்திடக் கூடாது. மாறாக நாட்டின் பிரதமர் ஆம், நம் நாட்டின் மாமன்னர் மோடிஜி பதிலளிக்க வேண்டும். பதிலளிப்பாரா? இதற்கும் மவுனம் காப்பாரா?

அண்ணாமலையே பொய் சொல்வதற்கு அளவே இல்லையா? திமுக ஆட்சிக் காலத்தில் 5 மருத்துவக் கல்லூரிகள்தான் தொடங்கப்பட்டது என்று கூறுவதற்கு வாய் கூசவில்லையா?

நாட்டிலேயே மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று அறிவித்தது மட்டுமல்ல, செயல்படுத்தியவரும் கலைஞர் என்பதனை அண்ணாமலை உணர வேண்டும்.

தோழர்களே ! அண்ணாமலை மட்டுமல்ல, அவரது கட்சி முழுமைக்குமே நுனி முதல் அடி வரை பொய் சொல்வதையே மூலதனமாகக் கொண்டு செயல்படும் நயவஞ்சக கூட்டம் என்பதனை மறந்து விடக்கூடாது.

ஊழலின் மொத்த உருவமாக செயல்படும்..
விலைவாசி உயர்வுக்கு காரணமான
வேலையின்மையை அதிகரித்த
மக்கள் ஒற்றுமையை சீர்குலைக்கின்ற
இந்தியை திணித்து தமிழை இழிவு படுத்துகின்ற
சொந்த லாபத்திற்காக நாட்டை நாசமாக்குகின்ற
பாஜகவை ஆட்சியை விட்டு அகற்ற

செப்டம்பர் 12, 13 மற்றும் 14 ஆகிய மூன்று தினங்கள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கின்ற தொடர் மறியல் போரில் ஆயிரம், ஆயிரமாய், பல்லாயிரமாய் பெரும் படையெனத் திரண்டு போர்க்களம் காண்பீர் !

அமைதி வழியில் நடைபெறும் அறப்போரில் பங்கெடுக்க ஒவ்வொரு தோழரும் செங்கொடி உயர்த்தி, சிங்கமென கர்ஜித்து களம் காண்பீர் !

நடைபெறும் போராட்டம் நாடே திரும்பிப் பார்க்கும் போராட்டமாக அமைந்திட வேண்டும். மறியல் போராட்டத்திற்கான நாட்கள் குறைவு என்பது மட்டுமல்ல, ஒன்றியத்தில் ஆளும் பாசிச ஆட்சியை அகற்றுவதற்கான காலமும் குறைவு என்பதனை கவனத்தில் கொள்க !

திருவிழா கூட்டத் திருடர்களை நாட்டு மக்கள் முன்பு நிறுத்தி, சவுக்கடி கொடுத்திடும் போர்க்களமாக அமையட்டும் !

கோயபல்ஸ்களின் கொட்டம் ஒடுங்கட்டும் !
உயரட்டும் செங்கொடி !
மீண்டும் சந்திப்போம்
வணக்கம்


தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# சந்திரயான் வெற்றி: சொல்வதும் சொல்லாததும்



அருண் நெடுஞ்செழியன்



**சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவை சென்றடைந்தது. கடந்த 23.8.2023 தேதியன்று மாலை சரியாக 6.04 மணிக்கு நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டர் திட்டமிட்டபடி நிலவில் மேற்பரப்பில் தரை யிறங்கியது.**

அடுத்து லேண்டரிலிருந்து பிரக்யான் ரோவர் வெற்றிகரமாக வெளிவந்து நிலவின் தரைத்தளத்தில் ஊர்ந்து சென்றது. இந்த ரோவர் வரும் நாட்களில் நிலவின் மேற்பரப்பில் தனிமங்கள் மற்றும் தண்ணீர் இருப்பு குறித்த ஆய்வை தொடங்கும். தென்துருவத்தில் ஒரு பகல் பொழுது என்பது பூமியில் 14 நாட்களுக்கு சமம் என்ற அறிவியலின்படி, இந்த ரோவரானது ஒரு லூனார் பகல் பொழுது முழுவதும் ஆய்வு செய்து தரவுகளை லேண்டருக்கு அனுப்பும். லேண்டர் மூலம் பூமியில் உள்ள கட்டுப்பாடு அறைக்கு ஆய்வுத் தகவல்கள் சேகரிக்கப்படும். இந்த ஆய்வு முடிவுகள் நிலவு குறித்த எதிர்காலத் திட்டமிடலுக்கு முக்கிய மைல்கல்லாக அமையும். உலக விண்வெளி வரலாற்றில் சந்திரயான்3 திட்டத்தின் வெற்றியானது ஒரு மகத்தான வரலாற்று சாதனை நிகழ்வென்றால் அது மிகையல்ல.

கடந்த 2019 ஆம் ஆண்டில் சந்திரயான்2 திட்டத்தில் நிலவின் மேற்பரப்பில் லேண்டரை தரை இறக்கும் இறுதிக்கட்ட முயற்சியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்த லேண்டர், நிலவில் விழுந்து நொறுங்கியது. தென் துருவத்தில் கரடு முரடான பள்ளங்கள் மற்றும் லேண்டரை தரையிறக்குவதில் உள்ள தொழில்நுட்ப சவால்கள் மற்றும் முந்தைய தரை யிறங்கும் முயற்சியில் ஏற்பட்ட தோல்வி போன்றவை, சந்திரயான்3 திட்டத்தின் இறுதிக்கட்ட தரையிறங்கும் நிகழ்வு பலத்த எதிர்பார்ப்புகளுடன் உற்றுநோக்கப்பட்டது.

## சந்திரயான் 3 வெற்றியை தட்டிச்செல்ல முயலும் மோடி:

திட்டமிட்டபடி எல்லாம் கச்சிதமாக நடந்து, திட்டமிட்ட நேரத்தில் நிலவில் லேண்டர் தரையிறங்கியவுடன், விஞ் ஞானிகள் ஆர்ப்பரிப்புடன் கரகோஷம் எழுப்பியும் வெற்றிக் களிப்பில் துள்ளிக் குதித்தும், சக விஞ்ஞானிகளை கட்டியணைத்துக் கைகொடுத்தும் வாழ்த்துக்களை பரிமாறியும் ஆனந்தக் கண்ணீர் விட்டும் கொண்டாடினர். இந்த அற்புதமான வெற்றிக் களிப்பில் லட்சக்கணக்கான மக்களும் கலந்துகொண்டு குதூகலித்தனர். இந்த நேரத்தில் யாரும் எதிர்பாராத நிலையில் திடீரென வீடியோ கான்பிரன்சிங் நேரலையில் பிரதமர் மோடி தேசியக் கொடியை ஆட்டியவாறு முகத்தில் புன்னகை பூத்தபடி திரையில் தோன்றுகிறார். இஸ்ரோ மையத்தில் நடந்த வெற்றிக் களிப்புகள் சில நொடிகளில் முடிவுக்கு வந்து பிரதமரின் உரையை கேட்கப் பணிக்கப்படுகின்றனர்.

சந்திரயான் திட்டம் தொடங்கிய நாள் தொட்டே இத்திட்டத்திற்காக இரவு பகலாக உழைத்தநூற்றுக்கணக்கான தொழில்நுட்ப வல்லுநர்கள், பணியாளர்கள், விஞ் ஞானிகள் இந்த வரலாற்று சாதனையை கொண்டாடிக் கொண்டிருக்க, வெற்றிக் களிப்பு ஆர்ப்பரிப்புகளுக்கு சிறு அவகாசம் கூடத் தராமல், அடுத்த சில நொடிகளில் பிரதமர் இஸ்ரோ மையத்தில் உரையாற்றப் போகிறார் என்றதும் இஸ்ரோ மையம் அமைதியாகிவிட்டது. விஞ்ஞானிகளோ வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாக காணொளியை கண்டபடி நின்றனர்.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உரையை நீட்டி முழங்கி வாசித்துவிட்டு விஞ் ஞானிகளை வாழ்த்தி முடிக்கிறார் பிரதமர் மோடி. நம் ஊரில் ஒரு பழமொழி உண்டு, கல்யாண வீட்டில் மாப்பிள்ளையாகவும் எழவு வீட்டில் பிணமாகவும் இருக்க வேண்டும் என. இந்த பழமொழி யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ பிரதமர் மோடியின் சுயமோக அரசியல் பரப்புரைக்கு கச்சிதமாகப் பொருந்துகிறது.

பொதுவாக நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தங்களின் கைகளில் குவித்துக் கொண்டுள்ள சர்வாதிகாரிகள், மன்னர்கள் நாட்டில் நடைபெறுகிற அனைத்து வரலாற்றுப் பெருமைகளுக்கும் உரிமை கொண்டாடி தன்வயப்படுதுக் கொள்ள முயல்வார்கள். இதன் மூலமாக தனது ஆட்சியில்தான் எல்லாம் நிகழ்ந்தது என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி, தனது பெயரையும் புகழையும் மேலும் பெரிதுபடுத்திக்கொள்ள முயல்வார்கள்.

சந்திரயான்2 திட்டத்தின் போது நிலவில் தரையிறங்குகிற தினம் அன்று இஸ்ரோவிற்கு சென்று விஞ்ஞானிகளின் சாதனையை அறுவடை செய்ய முயன்ற பிரதமர் மோடி, திட்டம் தோல்வியடைந்ததும் திட்ட இயக்குநர் சிவனை கட்டியணைத்து ஆறுதல் சொன்னார். இக்காட்சியை பார்க்கிற மக்களோ, ஆகா ! பிரதமருக்குத்தான் எவ்வளவு நல்ல கனிவான உள்ளமென பூரிப்பார்கள். ஆனால் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் திட்டமிட்டபடி சுய பரப்புரையாக மாற்றுவதற்கு மோடி தவறுவதில்லை.

ஒவ்வொரு தேர்தலின் போதும் தனது அன்னையிடம் பிரதமர் மோடி ஆசி வாங்கப்போவது போல, பிரதமர் மயிலுக்கு உணவுபோடுவது, புத்தகத்துடன் பூங்காவில் அமர்ந்திருப்பது என அனைத்தும் விளம்பர அரசியல் ஆதாயத்திற்காக நடத்தப்படும் மலிவான அரசியல்.

நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்கள், உலக நாட்டுத் தலைவர்கள், விஞ்ஞானிகள் இஸ்ரோவின் சாதனைக்குப் பாராட்டு தெரிவித்து வருகிற நிலையில், மோடியின் இந்த மோசமான விளம்பர அரசியலை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டிக்கத் தவறவில்லை.

“நிலவில் லேண்டர் தரையிறங்கிய அடுத்து நொடியே மிக வேகமாக ஓடிவந்து இந்த சாதனைக்கான நற்பெயரை தட்டிச்செல்ல பார்க்கிற நீங்கள், சந்திரயான்3 திட்டத்திற்கான நிதியை 32 விழுக்காடு குறைத்தும் இத்திட்டத்திற்கு வேலை பார்த்த ஊழியர்களுக்கு 17 மாதங்களாக சம்பளம் வழங்காமல் கைவிட்டு விட்டீர்கள்” என கடுமையாக பிரதமர் மோடியை சாடினார்.

“இஸ்ரோவிற்கும் விஞ்ஞானிகளுக்கும் எந்த ஆதரவும் தராமல் உங்கள் (ஒன்றிய) அரசு படுதோல்வி அடைந்து விட்டது. ஆனால் இஸ்ரோவின் சாதனைக்கு மட்டும் ஓடோடி வந்து புகழை தட்டிச் செல்வீர்களா?” என காட்டமாக விமர்சித்துள்ளார்.

முன்னதாக சந்திரயான் திட்டத்திற்கான ராக்கெட் ஏவுதளத்தை, ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனமான கனரக பொறியியல் நிறுவனம்(HEC) அமைத்துக் கொடுத்தது. இந்த நிறுவனத்தின் கடுமையான நிதிச் சுமை காரணமாக இங்கு பணியாற்றும் சுமார் 2,500 ஊழியர்களுக்கு 14 மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை. இது குறித்து பலமுறை ஊழியர்கள் கோரிக்கை விடுத்தும் செவி சாய்க்காத ஒன்றிய அரசு, ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான நிதி ஆதாரத்தை நிறுவனமே தேடிக் கொள்ள வேண்டும் என்றது. எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இதைச் சுட்டிக்காட்டி விமர்சித்து வருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் விமர்சனங்களை கண்டுகொள்ளாத பிரதமர் மோடி, தனது வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நேராக பெங்களூருவில் உள்ள இஸ்ரோ மையத்திற்கு சென்று, சந்திரயான்3 திட்ட வெற்றிக்கான சாதனைக்கு உரிமை கொண்டாடத் தவறவில்லை. இஸ்ரோ மையத்தில் பேசிய பிரதமர் மோடி, நிலவில் லேண்டர் இறங்கிய இடத்திற்கு “சிவசக்தி” என பெயர் சூட்டினார். ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளின் உழைப்பில் நிகழ்த்தப்பட்ட அறிவியல் சாதனைக்கு சற்றும் தொடர்பே இல்லாமல் மதச்சாயம் பூசி நிலவிற்கும் மதவாத அரசியலை எடுத்துச் செல்கிறார். நாட்டின் அனைத்துப் பிரச்சனைக்கும் செத்துப் போன நேருவை விமர்சித்து வருகிற பிரதமர் மோடி, தற்போது தொலைநோக்குப் பார்வையுடன் நேரு உருவாக்கிய இஸ்ரோவின் மைய அவையிலே நின்று, அறிவியல் விரோத கொள்கைகளை பரப்புரை செய்து கொண்டு இஸ்ரோவின் வெற்றியை தட்டிப் பறிக்க மேற்கொள்கிற முயற்சி இழிவினும் இழிவான விளம்பர அரசியலாகும்.

## இஸ்ரோவை வஞ்சிக்கிற மோடி அரசு:

இஸ்ரோ விஞ்ஞானிகளுக்குத் தலைவணங்குகிறேன் என மேடையில் முழங்கி விட்டு, நடைமுறையில் இஸ்ரோவை கைவிடுவதே பாஜக மோடி அரசின் கொள்கையாக உள்ளது.

சந்திரயான்3 திட்ட வெற்றி குறித்து பேசிய மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் “குறைந்த செலவில் விண்வெளி திட்டங்களை நிறைவேற்றிக் காட்ட முடியும் என்ற இந்தியாவின் திறனை சந்திரயான்3 திட்டம் நிரூபித்துக் காட்டியுள்ளது. ரஷ்யாவின் லூனா25 விண்கலம் நிலவில் விழுந்து நொறுங்கியது. அந்த திட்டத்துக்கு ரஷ்யா ரூ.16,000 கோடி செலவிட்டுள்ளது. ஆனால், சந்திரயான்3 திட்டத்துக்கு இந்தியா வெறும் ரூ.600 கோடிதான் செலவிட்டது. ஹாலிவுட் திரைப்படங்கள் தயாரிப்பதற்கு செலவிடும் தொகையைவிட, சந்திரயான்3 திட்டத்துக்கு செலவு மிகவும் குறைவு” என்றார்.

இதில் வருந்தத்தக்க உண்மை என்னவென்றால், இஸ்ரோவில் பணிபரியும் ஊழியர்களுக்கு குறைவான ஊதியம் கொடுத்து அதிக உழைப்பை சுரண்டுவதுதான் இந்த திட்டச் செலவு குறைவிற்கான ரகசியம்.

இது குறித்து இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மாதவன் நாயர் கூறியதாவது: “இஸ்ரோவில் பணிபுரியும் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் உள்ளிட்ட ஊழியர்களுக்கு வளர்ந்தநாடுகளைவிட 5மடங்கு குறைவாக சம்பளம் வழங்கப்படுகிறது. அப்படி இருந்தபோதிலும் நமது விஞ்ஞானிகள் வரலாற்று சாதனை புரிந்துள்ளனர்” என்கிறார்.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது விஞ்ஞானிகள் மிகக் குறைவான செலவில் சந்திரயான்3 விண்கலத்தை அனுப்பி உள்ளனர். இதற்கு அவர்கள் குறைவாக சம்பளம் பெறுவதும் ஒரு காரணம் என நேரடியாக செலவு குறைவுக்கான காரணத்தை போட்டு உடைத்துள்ளார்.

இதில் செலவு குறைவு என நாம் பெருமை பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. அப்படி பெருமை பேசுபவர்கள், விஞ்ஞானிகளின் உழைப்பைச் சுரண்டுவதை ஆதரிக்கிறவர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

## கார்ப்பரேட்டுகளின் வணிக இலக்காக மாறுகிறதா நிலா?

சந்திரயான்3 திட்ட வெற்றிக்காக நாம் மகிழ்ச்சியடையும் அதே நேரத்தில், இந்த ஆய்வுத் திட்டங்களின் நோக்கம் குறித்து அக்கறை செலுத்துவதும் அவசியமாகிறது. இவ்வளவு பணத்தையும் உழைப்பையும் முதலீடு செய்து மேற்கொள்ளப்படுகிற விண்வெளித் திட்டங்கள், கார்பரேட்களின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# சிலிண்டருக்கு 830 ரூபாய் உயர்த்தியது எதற்கான தண்டனை?

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

சிலிண்டருக்கு 830 ரூபாய் உயர்த்தியது எதற்கான தண்டனை? என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளார்.




சமையல் எரிவாயுவின் விலையை ஒரு சிலிண்டருக்கு ரூபாய் 200 குறைக்கலாம் என ஒன்றிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இந்தியப் பெண்களுக்கு ரக்ஷா பந்தன் மற்றும் ஓணம் பண்டிகையை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி அளித்திருக்கும் பரிசு என சொல்லப்பட்டுள்ளது.

மோடி 2014இல் பதவி ஏற்ற போது ஒரு சிலிண்டரின் விலை ரூ.410 ஆகும். ஆனால் இப்போது 1240 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதாவது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் காலத்தில், மூன்று சிலிண்டர் வாங்கியதற்கான பணத்தில், இப்பொழுது ஒரு சிலிண்டர் மட்டுமே வாங்க முடியும். ஒரு சிலிண்டருக்கு 200 ரூபாய் குறைத்தது ஓணத்துக்கான பரிசு என்றால், 830 ரூபாயை படிப்படியாக ஏற்றியது எதற்காக கொடுக்கப்பட்ட தண்டனை என்பதை அரசு சொல்ல வேண்டும். மோடி பதவி ஏற்பதற்கு முன்பு கச்சா எண்ணெயின் விலை ஒரு பேரல் 109.5 அமெரிக்க டாலராக இருந்தபோது, லிட்டருக்கு ரூபாய் 66 வீதம் பெட்ரோல் விற்கப்பட்டது. 84.23 அமெரிக்க டாலர் என்று கச்சா எண்ணெய் விலை தற்போது சரிந்த பின்பும், பெட்ரோல் விலை 103 ரூபாயாகவே மோடி அரசு வைத்திருக்கிறது. இதுவும் யாருக்கு கொடுக்கப்பட்டு வரும் பரிசு என்பதை மக்களுக்கு விளக்க வேண்டிய கடமை பிரதமர் நரேந்திர மோடிக்கு உண்டு. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியை உருவாக்கிய பின்பு, 2024 தேர்தலை நினைத்து பாஜக பதட்டத்தில் இருக்கிறது. இதனால் இத்தகைய பரிசுகளை அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு அது தள்ளப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு மட்டுமல்லாது, பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலையையும், மோடி அரசு கச்சா எண்ணெய் விலை சரிந்த அளவுக்கு குறைத்தே தீர வேண்டும். மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உத்தரவுக்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

இது தொடர்பாக மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உத்தரவுக்கு தடைவிதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது நல்லதோர் தீர்ப்பு என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

சேலம் சுகவனேஸ்வரர் கோயில் அர்ச்சகர் நியமனத்திற்கான விண்ணப்பங்களை வரவேற்று கோயில் நிர்வாக அதிகாரி. கடந்த 2018ம் ஆண்டு அறிவிப்பு வெளியிட்டார். இதனை எதிர்த்து தொடர்ந்த வழக்கில், அறிவிப்பில் கூறப்பட்டுள்ள தகுதிகள் சுகனேஸ்வரர் கோயிலில் ஆகம விதிகள் அடிப்படையில் இல்லை என கூறப்பட்டது.

மேலும் இந்து அறநிலையத்துறை சார்பில் குறிப்பிட்ட கோயில்களில் பின்பற்றக் கூடிய மரபை முடிவு செய்ய அந்த கோயில் அர்ச்சகரிடமிருந்து தகுதி சான்றிதழ் பெற்று விண்ணப்பதாரர்கள் சமர்பிக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. இந்த வாதங்களை கேட்ட நீதிபதி ஆனந்த வெங்கடேஷ், யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம். குறிப்பிட்ட ஆகமம் மற்றும் பூஜை முறைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் சாதிக்கு எந்த பங்கும் இல்லை என்று சமூகநீதிமிக்க தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பையும் எதிர்த்து மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்கா புர்வாலா, நீதிபதி ஆதிகேசவர் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது ஆகம கோயில்களில் அர்ச்சகர்கள் பரம்பரையாகத்தான் நியமிக்க வேண்டும் என்றும், தனி நீதிபதியின் உத்தரவு உச்சநீதிமன்றத்திற்கு எதிரானது என்றும் வாதிடப்பட்டது. இடைக்காலத் தடையும் கோரப்பட்டது.

இந்நிலையில் தனி நீதிபதி உத்தரவுக்கு எதிராக எந்த ஒரு இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது என உச்சநீதிமன்ற நீதிபதிகள் மறுத்து விட்டனர். இத்தகைய சூழலில் மேல்முறையீட்டு மனுவாக, உச்சநீதிமன்ற விசாரணைக்கு வந்தது. கோயில் ஆகம விதிப்படி தேர்ச்சி பெற்றவர்கள் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம் என்ற உத்தரவுக்கு தடைவிதிக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது.

இத்தகைய தீர்ப்பு வரவேற்கத்தக்கது என்பதோடு, சமூகநீதிக்கான மிக சரியான உறுதிப்பாடு என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. மேலும் இத்தீர்ப்பை அமுல்படுத்த உரிய முயற்சிகளை மேற்கொள்ள தமிழக அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.



தோழர் கே.சுப்பராயன் எம்.பி தலைமையில் நடைபெறும் மறியல் போராட்டத்தில் 2000த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வதென முடிவு செய்யப்பட்டது. திருப்பூர் தாராபுரத்தில் மறியல் தயாரிப்புக்கூட்டத்தில் துணைசெயலாளர் நா.பெரியசாமி.

5ம் பக்கத் தொடர்ச்சி

வணிக நலன்களுக்கு சேவை செய்யப் பயன்படப்போகிறதா அல்லது அறிவியல் ஆய்வை மட்டும் நோக்கமாக கொண்டிருக்கப் போகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். நிலாவை ஆய்வு செய்வதில் தற்போது அரை டஜன் நாடுகள் போட்டா போட்டி போடுகின்றன. இந்தாண்டில் மட்டும் ரஷ்யா, இந்தியாவைத் தொடர்ந்து ஜப்பானின் ஸ்லிம் திட்டம், சீனாவின் செஞ்சர் திட்டம், இஸ்ரேலின் ஸ்பேஸ் ஐஎல் திட்டம் ஆகியவை நிலவை ஆய்வு செய்ய முயற்சிக்கும் முக்கியத் திட்டங்களாகும்.

இந்தியா மனிதர்களை விண்வெளிக்கு அனுப்ப ககன்யான் திட்டத்தை அறிவித்துள்ளது போல, அமெரிக்காவின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமும் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்மைக்கால விண்வெளி ஆய்வுகளை காணும்போது, விண்வெளியும் கார்ப்பரேட்களுக்கான சந்தையாக மாற்றப்பட்டு வருவது தெளிவாகிறது. உதாரணமாக தற்போது எக்ஸ் என பெயர் மாற்றம் செய்யப்பட்ட ட்விட்டர் நிறுவனத்தின் உரிமையாளர் எலன் மஸ்க்,.ஸ்பேஸ் எக்ஸ் என்ற விண்வெளி நிறுவனம் மூலமாக விண்வெளி சந்தையில் துடிப்புடன் செயல்பட்டுவருவதை குறிப்பிடலாம்.

அண்மையில் அமெரிக்காவில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் உருவாக்கிய உலகின் மிகப்பெரிய ராக்கெட்டை விண்ணில் ஏவுகிற திட்டமொன்று தோல்வியில் முடிந்ததை செய்திகளில் அறிந்திருக்கலாம். உலகப் பணக்காரர்கள் வரிசையில் முதல் இடத்தில் உள்ள எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்எக்ஸ் (SPACE-X) நிறுவனம், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் அமைந்துள்ள நாசாவின் விண்வெளி ஏவுதளத்தில் ராக்கெட்டை ஏவிவருகிறது. ஸ்டார்ஷிப் எனப் பெயரிட்டுள்ள இந்த பிரம்மாண்ட ராக்கெட்டானது, இதுவரை விண்வெளிக்கு அனுப்பிய ராக்கெட்டுகளிலேயே மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட் ஆகும். இனிவரும் நாட்களில் இந்த ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டு சுற்றுப்பாதையில் நிலை நிறுத்திவிட்டால், நிலவுக்கும் செவ்வாய் கிரகத்திற்கும் மனிதர்களை அனுப்புகிற சோதனையில் பெரும் பாய்ச்சல் நிகழ்வாக அமைத்துவிடும். குறிப்பாக அப்பல்லோ திட்டம் என்ற பெயரில் 1972 ஆம் ஆண்டில் நிலவுக்கு மனிதனை அனுப்பிய நிகழ்விற்குப் பிறகு தற்போது 2025 ஆண்டில் அர்டேமிஸ்மிமிமி (Artemis III) என்ற திட்டத்தில் மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் திட்டத்தின் வெற்றி வாய்ப்பு நாசாவிற்கு பிரகாசமாகும். ஆனால் இதன் பயனும் புகழும் யாருக்கு சேரப்போகிறது என்பதுதான் கேள்வி.

நாசாவின் அர்டேமிஸ் என்ற பிரம்மாண்ட திட்டத்தில் ஒத்துழைக்க பல ஐரோப்பிய யூனியன் நாடுகளும் இந்தியாவும் ஒப்பந்தம் போட்டுள்ளன. அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் நிலவு திட்டத்திற்கு சமமான ஒரு திட்டத்தை ரஷ்யாவும் சீனாவும் மேற்கொண்டு வருகிறது.

1950–70 களில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே நிலவிய விண்வெளிப் போட்டி அனைவரும் அறிந்த ஒன்றுதான். இந்தப் போட்டியானது, அறிவியல், வானியற்பியல் மற்றும் விண்வெளித்துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியையும் சாதனைகளையும் நிகழ்த்தியது. கூடவே விண்வெளி மீது அறிவியலாளர்கள் மற்றும் மக்களின் ஆர்வத்தையும் முடுக்கிவிட்டது. பல விண்வெளி சாதனைகள் சாத்தியப்பட்டன. உலகின் முதல் செயற்கைக்கோளை (Sputnik 1) வெற்றிகரமாக பூமியின் சுற்றுப்பாதையில் அனுப்பியது. உலகின் முதல் விண்வெளி வீரரையும் முதல் வீராங்கனையையும் விண்ணிற்கு அனுப்பியது. முதல் விண்வெளி ஆய்வுக் கூடத்தை நிறுவியது என சோவியத் ரஷ்யா பல “முதல்” சாதனைகளை நிகழ்த்தியது. இந்த விண்வெளி போட்டியின் (space race) முத்தாய்ப்பாக நிலவில் முதல் மனிதனை 1972ல் அமெரிக்கா இறக்கியது. விண்வெளி போட்டியில் அமெரிக்காவின் வெற்றியாக இது கொண்டாடப்பட்டது.

அறுபதுகளில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்குமான விண்வெளிப் போட்டி தற்போதைய புவிசார் அரசியல் நிலைமையில் வேறொரு வடிவம் எடுத்துள்ளதாக தெரிகிறது. ஒருபக்கம் அமெரிக்கா, இஸ்ரேல், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுபக்கம் ரஷ்யா, சீனா நாடுகள். இவ்விரு முகாமும் போட்டி போட்டு நிலவில் ஆய்வுகளை முடுக்கிவிட்டுக் கொண்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் 18 அன்று நிலவுக்கு ரஷ்யா அனுப்பிய விண்கலம் லூனா25 தோல்வியில் முடிந்தது. ஆனால், சீனா வெற்றிகரமாக தனது விண்கலத்தை நிலவில் தரையிறக்கி ஆய்வு செய்து வருகிறது.

1960கள் போல் அல்லாமல், தற்போதைய உலகமய தாராளமய சகாப்தத்தில் பொதுத்துறை விண்வெளி நிறுவனங்களின் இடத்தை தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் தற்போது எடுத்துக் கொண்டுள்ளன. விண்வெளி திட்டங்களில் முதலீடு, விண்வெளி சுற்றுலா, நிலவு மற்றும் பிற கோள்களில் உள்ள தனிமங்களை பயன்படுத்திக் கொள்வது என விண்வெளித்துறையே வேறொரு பரிணாமம் எடுத்துள்ளது.

தற்போது டியர் மூன் (Dear moon) என்ற திட்டத்தில், நிலவின் மேற்பரப்புக்கு மனிதர்களை ஸ்பேஸ் எக்ஸ் அழைத்துச் செல்ல உள்ளது. அடுத்து சில ஆண்டுகளில் நிலவில் மீண்டும் மனிதர்களை இறக்குகிற திட்டதையும் ஸ்பேஸ் எக்ஸ் அறிவித்துள்ளது. இம்முறை நிலவுக்கு பெண் ஒருவரை அழைத்துச் சென்று தரையிறக்கப் போவதாக கூறியுள்ளது. அடுத்த சில பத்தாண்டுகளில் செவ்வாய்க்கு ராக்கெட் அனுப்பும் திட்டம், நிலவில் ஒரு முகாம் அமைக்கிற திட்டம் என அடுத்தடுத்த விண்வெளி பாய்ச்சல்களை நிகழ்த்த ஸ்பேஸ் எக்ஸ் திட்டமிட்டுள்ளது.

அரசுத்துறை நிறுவனங்கள் விண்வெளித்துறையில் இருந்து ஒதுங்குவதும் உலகின் பெரும் பணக்காரர்கள் விண்வெளித்துறையை தொழிலாக மாற்றுவதும் எங்கு போய் முடியும் எனத் தெரியவில்லை. அரசுகள், ராணுவத்திற்கு ஒதுக்குகிற நிதியில் நூறில் ஒரு பங்கை விண்வெளி ஆய்வுக்கு ஒதுக்கினாலே போதும். ஆனாலும் அரசிற்கும் அதில் எந்த நாட்டமும் இல்லை. முதலாளித்துவம் தற்போது புதிதாக ஒரு சந்தையை பிடித்துக் கொண்டுள்ளது அல்லது உருவாக்கிக் கொண்டுள்ளது. இனி செவ்வாய் கிரகத்தையும், நிலவையும் தனியார் நிறுவனங்கள் பங்கு போட்டுக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அறிவியல் சாதனைகள் என்ற திரைக்கு பின்னே வர்க்க முரண்பாடுகள் வெற்றிகரமாக மறைக்கப்படும். மறக்கடிக்கப்படும்.

தொடர்புக்கு : 98423 91963

## வினாடி - வினா

1 இந்தியாவில் விண்வெளி ஆய்வுக்காக 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அமைப்பின் பெயர் என்ன?

2 சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியா அனுப்பும் விண்கலத்தின் பெயர் என்ன?

3 சூரியக் குடும்பம் தோராயமாக எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது?




4 தோழர் பி.சீனிவாசராவ் 1930 ஆம் ஆண்டு அன்னிய துணி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதால் எவ்வளவு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்?

5 தோழர் ஜீவா (ப.ஜீவானந்தம்) எந்த நூலை மொழிபெயர்த்ததற்காக கை கால்களில் சங்கிலியிட்டு இழுத்துச் சென்று சிறையில் அடைக்கப்பட்டார்?

6 இந்திய சீன எல்லை எப்படி அழைக்கப்படுகிறது?

விடைகள் 12 ஆம் பக்கம்

# காவிரி: காலை வாரிய பாஜக!



த.லெனின்

**இந்தியா முழுவதும் வெறுப்பு அரசியலை விதைத்து சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையை தனது அரசியலாக கொண்டிருக்கிற பாஜக மணிப்பூரில் பழங்குடி மக்களுக்கு எதிரான வெறுப்பை விதைத்து இன்று பெரும் கலவரங்களை எதிர்கொண்டு வருகிறது ஹரியானவில் சமீபத்தில் நடைபெற்ற கலவரங்கள் அனைத்துக்கும் இவையே காரணமாக அமைந்தது.**

இந்தியா கூட்டணி கட்சிகளின் கூட்டம் பெங்களூரில் நடைபெற்ற போது மேகதாது அணையை காரணம் காட்டி தமிழக முதல்வர் அக் கூட்டத்தில் கலந்து கொள்ள கூடாது என்று தமிழக பாஜக கருப்புசட்டை அணிந்து இங்கே போராட்டம் நடத்தியது ஆனால் கர்நாடக பாஜக கபினி அணை திறந்து விடப்படுவதை எதிர்த்து ஆற்றில் இறங்கி தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடக்கூடாது என்று போராட்டம் நடத்துகிறது பாஜகவின் முன்னாள் முதல்வர் பசவராஜ் பொம்மை தமிழ்நாட்டிற்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்கக் கூடாது என்று தொடர்ந்து கருத்து தெரிவித்து வந்ததன் விளைவு இன்று தண்ணீர் திறந்து விட்ட காங்கிரஸ் அரசு அதை நிறுத்தி உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகள் காவிரி ஒழுங்காற்றுவாரியத்தின் உத்தரவுகள் அனைத்தும் தொடர்ச்சியாக முழுமையாக கர்நாடகா பின்பற்றுவதில்லை இதன் காரணமாக தமிழக விவசாயம் பரப்புக்கு போதிய தண்ணீர் இன்றி நட்ட பயிர்கள் கருகி வரும் கொடூரம் மீண்டும் எழுந்துள்ளது.

இறுதி தீர்ப்புக்கு பிறகு மாதவாரியாக தமிழகத்திற்கு திறந்து விடப்படுகிற நீரின் அளவை கர்நாடகா தொடர்ந்து புறக்கணித்து வருகிறது ஆனால் அதே நேரம் வெள்ளக் காலங்களில் தனது மாநிலத்தையும் அணைகளையும் பாதுகாத்துக் கொள்ள அதிக அளவு நீரை திறந்து விட்டு இவற்றை சமன் செய்வது போன்ற ஒரு நாடகத்தையும் தமிழக காவிரி பாசன பகுதியை கர்நாடக தனது வடி நிலப் பகுதியாகவே மாற்றி உள்ளது என்பதையும் நாம் பார்க்க முடியும்


1901ஆம் ஆண்டு காவிரியின் நீர் பகிர்வில் தமிழ்நாடு 430.13 டி.எம். சியையும் கர்நாடகா 71.96 டி.எம்.சி நீரையும் பயன்படுத்தி வந்தது

1924 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி தமிழ்நாட்டில் பாசனப்பரப்பு 23 லட்சத்து 17 ஆயிரத்து 100 ஏக்கர் ஆகவும் கர்நாடக பாசனப்பரப்பு 5 லட்சத்து 65,400 ஏக்கர் ஆகவும் கேரளாவின் பாசனப்பரப்பு 6300 ஏக்கர் என மொத்தம் 28 லட்சத்து 88 ஆயிரத்து 800 ஏக்கர் பாசனப்பரப்பை கொண்டதாக இருந்தது. குடிநீர் தேவைக்கான நீரின் அளவு 7.20டி எம் சி அத்துடன் மேற்சொன்ன பாசனப் பரப்பிற்கு தேவையான மொத்த நீரின் அளவு 699.45டி எம் சியாக காவிரி நீரின் தேவை இருந்தது.

1971 ஆம் ஆண்டு பாசன பரப்பு தொடர்ந்து அதிகரித்து வந்ததன் விளைவாக குடிநீர் தேவை மற்றும் பாசன பரப்புக் காண நீரின் அளவு 749.70 டிஎம் சியாக உயர்ந்து விட்டது. இந்த நிலையில் மாநிலங்களுக்கு இடையே காவிரி நீர் பயன்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலை களைவதற்காக 1972 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு உண்மை நிலை அறியும் குழுவை அமைத்தது இக்குழு காவிரி மூலம் பயன்பெறும் மற்றும் மேற்கொள்ள பாசன திட்டங்களுக்கும் சேர்த்து தேவைப்படும் நீரின் அளவினை மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தது. அதன்படி கேரளா மாநிலத்திற்கு 208.70 டிஎம்சி, கர்நாடக மாநிலத்திற்கு 410.10 டிஎம்சி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு 641.50 டி எம் சி என்றும் மொத்தம் 1260.30 டிஎம்சி நீர் தேவைப்படும் என்று கணக்கிட்டது.

வரலாறு இப்படி இருக்க இவற்றை எதையும் கணக்கில் எடுக்காமல் இறுதி தீர்ப்பு தமிழ்நாட்டின் நீர் தேவையை மிகவும் சுருக்கித் தான் அளித்திருந்தது ஆனாலும் அதனை கொடுப்பதற்கும் தொடர்ந்து கர்நாடகம் சண்டியர்தனம் செய்து வந்திருக்கிறது. மதரீதியான பிளவு அரசியலுக்கு எவ்வளவு முனைப்பு காட்டுமோ அதே அளவிற்கு பாஜக மாநிலங்களுக்கு இடையே உள்ள நதிநீர் பிரச்சினைகளிலும் ஒரு மாநில மக்களை இன்னொரு மாநில மக்களுக்கு எதிராக மோத விட்டு ரத்தம் குடிக்கும் கேடுகெட்ட புத்தி மட்டும் இன்னும் குறைந்துவிடவில்லை என்பதற்கு இதுவே சாட்சியாக அமைந்துள்ளது.





இந்த ஆண்டு குறுவை சாகுபடி காவிரி டெல்டா முழுவதும் முழு வீச்சோடு நடைபெற்று வரும் வேளையில் அதற்கு தண்ணீர் விடாமல் தவிக்க விடும் நிலையை பாஜக ஏன் தூண்டி விட வேண்டும்?

தமிழ்நாட்டிற்கும் கர்நாடகாவிற்கும் இடையே நதி நீர் பங்கீட்டில் பல ஆண்டுகளாக பிரச்சினை நிலவி வருகிறது.

இதனை சரி செய்ய உச்சநீதிமன்ற உத்தரவின்படி காவிரி மேலாண்மை வாரியத்தையும், ஒழுங்காற்று குழுவையும் மத்திய அரசு அமைத்தது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் ஜனவரி மாதம் வரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிட வேண்டிய நீரின் அளவை வாரியம் வரையறுத்தது.

ஆனால், போதிய நீர் இல்லை, கர்நாடக மாநிலத்தில் குடிநீருக்கே பற்றாக்குறை என்ற பல்வேறு காரணங்களை அடுக்கி தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை திறந்துவிடுவதில் கர்நாடக மாநில அரசு பாரபட்சம் காட்டி வருகிறது.

இந்த நிலையில் டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் 22வது ஆலோசனைக்கூட்டம் கடந்த 11ந் தேதி நடைபெற்றது. கூட்டத்தில் தமிழகத்திற்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி என 38 டி.எம்.சி தண்ணீரைத் திறக்க வேண்டும் என காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு காவிரியில் நீர் திறந்து விடக்கோரி தமிழக அரசு சார்பில் கடந்த 14ந் தேதி மனுத் தாக்கல் செய்யப்பட்டது. கர்நாடக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு, காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கை விசாரிக்க, நீதிபதிகள் பி.ஆர்.கவாய், நரசிம்மா மற்றும் பி.கே.மிஸ்ரா ஆகியோர் அடங்கிய 3 நீதிபதிகள் கொண்ட புதிய அமர்வினை அமைத்து உத்தரவிட்டிருந்தது.

இந்த புதிய அமர்வில் காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தை நடத்தி தமிழகம், கர்நாடகா முன் வைக்கும் கோரிக்கையை பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்.

காவிரி ஆணைய உத்தரவை கர்நாடகா செயல்படுத்தியதா? என்பது குறித்தும் பிரமாணப் பத்திரத்தில் விளக்கம் தேவை எனவும் அணைகளில் தற்போதைய நீர் இருப்பு விவரம், மழைப்பொழிவு உள்ளிட்டவை குறித்து செப்டம்பர் 1ந் தேதிக்குள் அறிக்கை அளிக்கவும் உத்தரவிட்டது.

இதனிடையே, ஆகஸ்டு மாதத்தில் எஞ்சியுள்ள 2 வாரங்களுக்கான நீர் பங்கீடு தொடர்பான, ஒழுங்காற்றுக்குழு கூட்டம் காணொலி வாயிலாக சமீபத்தில் நடைபெற்றது.கூட்டத்தில் கர்நாடக அணைகளில் இருந்து, அடுத்த 15 நாட்களுக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி வரை, காவிரி நீரை தமிழகத்துக்கு திறந்து விடும்படி பரிந்துரை செய்யப்பட்டது.

இதற்கு கர்நாடக விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மண்டியாவில் உள்ள கே.ஆர்.எஸ். அணையில் இருந்து வெளியேற்றப்படும் காவிரி ஆற்றில் இறங்கி விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.இதற்கான அடிப்படைகளை அமைத்தது கர்நாடகா பாஜக என்பதும் வெளிப்படையாக தெரிந்தது

இந்த நிலையில் கர்நாடக முதல்மந்திரி சித்தராமையா மைசூருவில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் காவிரி ஒழுங்காற்று ஆணையம் தமிழகத்திற்கு மேலும் 15 நாட்கள் 5 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடும்படி கூறியுள்ளது.

கர்நாடக அணைகளில் நீர் இருந்தால் மட்டுமே தமிழகத்திற்கு திறந்துவிட முடியும். ஏற்கனவே தமிழகத்திற்கு 26 டி.எம்.சி திறந்துவிட்ட நிலையில் மீண்டும் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க திறக்க வாய்ப்பு இல்லை

கர்நாடக அணைகளில் நீர் இருந்தால் மட்டுமே தமிழகத்திற்கு திறந்துவிட முடியும். தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட்டால், கர்நாடகத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் என மீண்டும் இத்துப்போன பழைய பூச்சாண்டியையே பாடிவருகிறது கர்நாடகம்.

நாட்டின் ஒருமைபாட்டுக்கு ஊறு விளைவிக்கும் இந்த சிக்கலை தீர்ப்பதற்கு ஆளும் கட்சியான பாஜக எந்த முனைப்பும் காட்டாது மோதல் போக்கில் இருக்கும் மாநிலங்களுக்குள் தங்கள் செல்வாக்கை அதிகரிக்க இதனை அரசியலாக்குகின்ற ஒன்றைத்தான் தொடர்ந்து பாஜக செய்து வருகிறது. இந்தியாவின் ஒருமைபாட்டை இறையாண்மையை காக்க அது எந்த வகையிலும் முயற்சிக்கவில்லை. மாறாக சொந்த அரசியல் நலன்களுக்காக நாட்டின் இறையாண்மையும் ஒருமைப்பாட்டையும் சிதைக்க கூட தயங்காது என்பதையும் அவர்களது தற்போதைய நடவடிக்கைகள் மெய்ப்பித்திருக்கிறது.

எனவே தவிக்கும் தமிழகத்திற்கு உடனடியாக தண்ணீர் திறந்து விடவும் வெளிநாடுகளோடு போடப்பட்ட பங்களாதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே அமைந்த டீஸ்டா நதியின் பாரக் அணை ஒப்பந்தம் இந்திய நேபால் கொசி நதிநீர் ஒப்பந்தம் இந்திய பாகிஸ்தான் சிந்து நதி ஒப்பந்தம் ஏன் இந்திய அளவில் போடப்பட்ட நர்மதா நதிநீர் ஒப்பந்தத்தைப் போல காவிரி நதிநீர் பங்கேட்டையும் முடிவெடுத்து நடைமுறைப்படுத்தினால் அது ஏக இந்தியாவுக்கும் நல்லது. தமிழ்நாட்டின் உணவு மண்டல உணவு உற்பத்திக்கும் நல்லதாக அமையும் ஆனால் நல்லது செய்யவா பாஜக அல்லதுதான் செய்யும் என்பதை அவர்களின் நிகழ்கால செயல்பாடுகள் நிரூபித்து வருகின்றன அறச்சீற்றத்தோடு மக்கள் இதற்கான பதிலை அளிப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம்!

தொடர்புக்கு:9444481703



சத்தியமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். சுரேந்தர் என். ஸ்ரீ செல்வி திருமண வரவேற்பு விழாவில் கோபி சி எஸ் கட்சி பள்ளி கட்டிட நிதியாக ரூபாய் 15 ஆயிரத்தை மாநில செயலாளர் இரா. முத்தரசன் அவர்களிடம் வழங்கினார், மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி சிபிஎம் கட்சியின் தலைவர்கள் தோழர்கள் கே துரைராஜ் பா மாரிமுத்து ஆகியோர் உடன் இருந்தனர்.

# மோடி ஆட்சியின் மெகா ஊழல் ரூ.7,50,0

## சி.ஏ.ஜி.யின் அதிர வைக்கும் அறிக்கையை சுட்டிக்காட்டி நாகை எம்.செல்வ

மோடி ஆட்சியில் ஏழு லட்சத்து ஐம்ப தாயிரம் கோடி ரூபாய் மெகா ஊழல் நடை பெற்றுள்ளது. எனவே, ஊழலைப் பற்றி பேச பா.ஜ.க.வுக்கு அருகதை உண்டா? என்று சி.ஏ.ஜி.யின் அதிரவைக்கும் அறிக் கையை சுட்டிக்காட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாகை எம்.செல்வராஜ் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன். தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், கே.மாரிமுத்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்டச் செயலாளர் வை.செல்வராஜ், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள்.கோ. பழனிச்சாமி, வை. சிவபுண்ணியம், பி. பத்மாவதி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப் பினர் எம். செல்வராஜ் இல்லத் திருமண விழாவுக்குத் தலைமையேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

இங்கு நன்றி உரை ஆற்றிய நாடாளு மன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் அவர் களும், நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் அன்புக்குரிய முத்தரசன் அவர்களும், இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு நான் வந்திருப்பதை சுட்டிக் காட்டி, நாங்கள் கேட்டதும் தேதியைத் தந்து எந்தவித மறுப்பேதும் சொல்லாமல் வந்திருக்கிறேன் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள்.

நான் தட்டாமல் இந்தத் திருமண நிகழ்ச்சிக்கு வந்ததற்கு காரணம், மண் ணின் மைந்தர் என்ற காரணம் ஒரு பக்கம் இருந்தாலும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவர் அன்போடு பண்போடு பாசத்தோடு என்னிடத்தில் மட்டுமல்ல, எல்லோரிடத்திலும் பழகக்கூ டியவர்.

### நாகை மாவட்டத்திற்கு ஒளியாகவும், மதியாகவும் இருக்கிறார் செல்வராஜ்!

இந்த நிகழ்ச்சியை பொறுத்தவரைக்கும் நானே மனமுவந்து இந்தத் தேதியை அவரி டத்தில் வழங்கி இந்தத் தேதியைப் பயன்ப டுத்திப் பல நிகழ்ச்சி களுக்கு ஒப்புதல் தந்து மூன்று நாட்களாக இந்த டெல்டா மாவட் டத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். ஆனால் நடந்து முடிந்திருக்கும் இந்தத் திருமண நிகழ்ச்சியில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்ந்து நான் வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

1975இல் இருந்து தன்னை இந்த இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைத்துக் கொண்டு ஏறக்குறைய 48 ஆண்டுகால மாக இந்த இயக்கத்திற்காக உழைத்துக் கொண்டிருப்பவர்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் பல பொறுப்புகளில் பணியாற்றியவர்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர், நாகை, திருவாரூர் மாவட்ட துணைச் செயலாளர், நாகை மாவட்ட செயலாளர், மாநில நிர் வாகக் குழுவின் உறுப்பினர், தேசிய குழுவின் உறுப்பினர் இவ்வாறு பல்வேறு பொறுப்புகளில் இருந்து இயக்கப் பணி பொதுப் பணி மக்கள் பணி ஆற்றியிருப் பவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

தற்போது கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினராக, ஏ. ஐ. டி. யு. சி. யின் மாநிலத் துணைத் தலைவராகப் பொறுப் பேற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவ்வளவு பெரிய பொறுப்புகளை, இவ் வளவு பதவிகளில் எல்லாம் இருந்து கட மைகளை ஆற்றிக் கொண்டிருந்தாலும், ஒரே வரியில் அவரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் ஒரு மக்கள் தொண்டராக இருந்து தன்னுடைய கடமையைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

ஏழு முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள். அதில் நான்கு முறை, அதாவது 1989, 1996, 1998, 2019 இந்த ஆண்டு களில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று அவர் எம்.பி.ஆக பணி யாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். இந்த நான்கு முறை வெற்றி பெற்றார் என்றால், தி.மு.க.வின் கூட்டணியில் இருந்து வெற்றி பெற்றிருக்கிறார் என்பதுதான் எங்களுக்கு இருக்கும் சிறப்பு.

எனவே மக்கள் மன்றத்தில், நாடாளுமன் றத்தில், மக்களுக்காக, தொழிலாளர்களுக் காக, விவசாயிகளுக்காகத் தொடர்ந்து போராடக்கூடியவர், வாதாடக் கூடியவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

### மணமக்களை வாழ்த்தும் வாய்ப்புப் பெற்றமைக்கு மகிழ்ச்சி!

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என் றால், தென்னக ரயில்வே தொடர்பாக டெல்டா மாவட்ட மக்களுக்காக அவர் நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்கது.

அதேபோல் உழவர்களின் கோரிக்கைக் காக ஒரே நேரத்தில், நாகை மாவட்டத்தில், 50 இடங்களில் மறியல் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர் நம்முடைய செல்வராஜ் அவர்கள்.

எனவே அப்படிப்பட்ட ஒரு செயல் வீரர், ஒரு ஆற்றலாளர், ஒரு மக்கள் தொண்டர். இப்படிப்பட்ட பல்வேறு பெருமைகளை பெற் றிருக்கும் நம்முடைய செல்வராஜ் அவர்கள் இல்லத்தில், அவருடைய மகளுக்கு நடை பெறும் இந்தத் திருமணத்தில் நான் கலந்து கொண்டு, அந்த மணவிழாவை நடத்தி வைத்து, அதே நேரத்தில் மணமக்களை வாழ்த்தும் ஒரு சிறப்பான வாய்ப்பை பெற் றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகி றேன், பெருமைப்படுகிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், தி.மு.க.விற்கும் எப்பொழுதும் நட்பு உண்டு, அன்பு உண்டு. கலைஞர்தான் அடிக்கடி சொல்வார், பெருமையோடு சொல்வார். தந்தை பெரியாரை நான் பார்த்திருக்கா விட்டால், அறிஞர் அண்ணாவை நான் சந்தித்திருக்காவிட்டால், நான் கம்யூனிஸ்ட் கட்சியில்தான் இருந்திருப்பேன் என்று பலமுறை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

### தி.மு.க.வுக்கும் இந்தியக் கம்யூனிஸ் டுக்கும் உள்ள நட்பு கொள்கை சார்ந்தது!

எனவே, அந்த உணர்வோடு நம்முடைய நட்பு, தேர்தலுக்கான நட்பு மட்டுமல்ல, கூட் டணியில் இருக்கும் நேரத்தில் ஏற்படும்







நட்பு மட்டுமல்ல, கொள்கை நட்பு. அதுதான் முக்கியம். எதிர்கட்சியாக இருந்தபோதும் சரி, இப்போது ஆளுங்கட்சியாக இருக் கிறபோதும் தொடர்கிறது. தொடர்கிறது என்றால், இது என்றைக்கும் தொடரும். உறுதியாக சொல்கிறேன், வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயமாகத் தொடரும்.

ஏனென்றால் நாடாளுமன்றத் தேர்தலை நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். அந்த நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு சந்திக்க இருக்கிறோம் என்று சொன்னால், ஏதோ ஐந்து வருடத்திற்கு ஒருமுறை வரும் தேர்தலாக மட்டும் நாம் நினைத்து விடக் கூடாது. அதையும் தாண்டி சொல்கிறேன், ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறும் தேர் தலாகக் கூட நீங்கள் நினைத்து விடக் கூடாது. இந்திய ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும். இன்றைக்கு சர்வாதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் ஒரு பாசிச ஆட் சியை நடத்திக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண் டும். ஏனென்றால் தமிழ்நாட்டைக் காப்பாற் றிவிட்டோம். இந்தியாவைக் காப்பாற்றும் நிலைக்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். இந்தியாவைக் காப்பாற்றுவதற்காகத்தான் 'இந்தியா' கூட்டணி அமைந்திருக்கிறது.

### மும்பையில் நடைபெறும் 'இந்தியா' கூட்டணி கூட்டத்தில் பங்கேற்கிறேன்!

பீகார் மாநிலத்தில், நிதிஷ் குமார் தலை மையில் கூடி எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டணி உருவாக முதல் கூட்டத்தை பீகார் மாநிலத்தில் நடத்தினோம். அதற்கு அடுத்து கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் இரண்டாவது கூட்டத்தை நடத்தினோம். அதில்தான் இந்தியா என்ற பெயரைத் தேர்வு செய்து நம் கூட்டணிக்கு பெயர் அறிவித்தோம். அடுத்த வருகின்ற ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய இரண்டு நாட்கள் மும்பையில் மூன்றாவது கூட்டம் நடைபெற இருக்கிறது. அதில் முக்கிய முடிவுகளை எல்லாம் நாம் அறிவிக்க இருக்கிறோம். நானும் அந்தக் கூட்டத்திற்குச் செல்ல இருக்கிறேன்.

எனவே தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சியை உருவாக்கித் தருவதற்கு நீங்கள் எல்லாம் எவ்வாறு காரணமாக இருந்தீர்களோ அதே போல், ஒன்றியத்தில் நாடாளுமன்றத் தேர் தல் மூலமாக ஒன்றிய அரசு அமைவதற்கு அது நல்லரசாக அமைவதற்கு நீங்கள் எல்லாம் காரணமாக இருக்க வேண்டும்.

### தேர்தல் பிரச்சாரத்தை எப்போதும் திருவாரூரில்தான் தொடங்குவேன்!

தேர்தல் பிரச்சாரத்தை இங்கே தொடங்கி வைக்க வேண்டும் என்று நம்முடைய முத்தரசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொடங்கத்தான் வந்திருக்கிறேன், நான் எப்போதுமே தேர்தல் பிரச்சாரத்தை திருவா ரூரில்தான் தொடங்குவேன். இப்போதும் அதே உணர்வோடுதான் இந்த மேடையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக் கிறேன்.

ஒன்பது வருடமாக பி.ஜே.பி.யின் ஆட்சி மோடி அவர்கள் தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஒன்பது வருட மாக நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் இதை செய்திருக்கிறோம், இந்தத் திட்டங்களை அறிவித்திருக்கிறோம், நிறைவேற்றி இருக்கிறோம், சாதனைகளைப் படைத்தி ருக்கிறோம், மக்களுக்கு எல்லாம் இப்படி நன்மைகளை செய்திருக்கிறோம் என்று ஏதாவது அவர்களால் சொல்ல முடிகிறதா? எதுவும் சொல்ல முடியவில்லை.

தேர்தலுக்கு முன்னால் என்ன சொன் னார்கள், வெளிநாடுகளில் இருக்கும் கருப்பு பணத்தை எல்லாம் கைப்பற்றி அதை இந்தியாவிற்குக் கொண்டு வந்து நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் 15 லட் சம் ரூபாய் கொடுக்கப்போகிறேன் என்று அறிவித்தார். நான் பல கூட்டங்களில் கேட்டேன். நான் மட்டுமல்ல, எல்லோரும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். 15 லட்சம் வேண்டாம், 15 ஆயிரமாவது தந்தார்களா? 15 ஆயிரம் வேண்டாம், 15 ரூபாயாவது தந்தார்களா? இதுவரையில் இல்லை.

### இளைஞர்களின் வேலை பறிப் புதான் ஒன்றிய அரசின் சாதனை!

நாட்டில் இருக்கும் இளைஞர்களுக்கு எல்லாம் ஒரு ஆண்டிற்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரு வோம் என்று உறுதிமொழி தந்தார்கள். எங் காவது ஒன்றிய அரசின் மூலமாக வேலை வழங்கப்பட்டு இருக்கிறதா? இல்லை. வேலைகள் பறிக்கப்பட்டு இருக்கிறது. இது தான் இந்த ஆட்சியின் நிலை. இதைப்பற்றி நாம் ஒரு பக்கத்தில் பேசுகிறோம்.

இதைவிட கொடுமை, மதத்தை வைத்து ஆங்காங்கே மதக் கலவரங்களை ஏற்ப டுத்தி, நாட்டை இரண்டாக்கும் சூழ்நி லையில் ஒரு கொடிய ஆட்சி இன்றைக்கு இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் கலந்து பேசி இதற்

# ooooooooo!

## வராஜ் எம்.பி. இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு!



கான முடிவெடுக்க வேண்டும், இந்த ஆட்சியை ஒழித்தாக வேண்டும், தேர்தலில் நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியா என்ற தலைமையில் ஒரு கூட்டணியை நாம் அமைத்திருக்கிறோம்.

இதைப் பிரதமர் மோடியால் தாங்க முடியவில்லை. அதிலும் தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் எப்படி நாடாளுமன்றத் தேர்தலில், சட்டமன்றத் தேர்தலில், உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் ஒரு கூட்டணி அமைத்து ஸ்ட்ராங்காக அந்தக் கூட்டணியை வழிநடத்திக் கொண்டிருக்கிறோமோ, அந்தக் கூட்டணி தொடர்ந்து தமிழ்நாட்டில் வெற்றி பெற்று கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாக தெரியும்.

### 'இந்தியா' கூட்டணிக் கண்டு அச்சம் வந்திருக்கிறது மோடிக்கு!

எனவே அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் இந்தக் கூட்டணியும் இந்தியா கூட்டணியில் சேர்ந்திருக்கிறது. இந்தியா என்ற கூட்டணி உருவாகுவதற்கு தமிழ்நாட்டில் இருக்கும் இந்தக் கூட்டணி காரணமாக இருக்கிறது என்ற ஒரு ஆத்திரம் இன்றைக்கு பிரதமராக இருக்கும் மோடிக்கு வந்துவிட்டது. அதனால்தான் எங்கு சென்றாலும், அது சுதந்திர தின நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கொடியேற்று விழா நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது பல மாநிலங்களுக்குச் சென்று அங்கு நடத்தும் அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி அல்லது வெளிநாடுகளுக்கு செல்லும் நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி எங்கு சென்றாலும் இன்றைக்கு நாம் அமைத்திருக்கும் கூட்டணியைப் பற்றி விமர்சனம் செய்து பேசிக் கொண்டிருக்கிறார், கொச்சைப்படுத்தி பேசுகிறார்.

என்ன பேசுகிறார்? தமிழ்நாட்டில் ஊழல் வந்துவிட்டதாம். ஒன்பது வருடமாக சொல்லிக் கொண்டிருக்கிறார். "எனவே அந்த ஊழலை ஒழித்தே தீருவேன். இந்தியாவில் இருக்கும் ஊழலைத் ஒழித்தே தீருவேன்" என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறார்.

### ஊழலைப் பற்றி பேசுவதற்கு மோடிக்கு யோக்கியதை உண்டா?

நான் பிரதமர் மோடி அவர்களை பார்த்து அடக்கத்தோடு கேட்க விரும்புவது, ஊழலைப் பற்றி பேசுவதற்கு யோக்கியதை பிரதமராக இருக்கும் மோடிக்கு உண்டா? உங்களுடைய வண்டவாளம் எல்லாம் இப்போது சி.ஏ.ஜி. ஆதாரங்களோடு எடுத்து வெளியிடுகிறார்களே. எதையும் ஆதாரத்தோடுதான் பேச வேண்டும். அதற்காக நான் புள்ளி விவரத்தை எல்லாம் குறித்து கையில் எடுத்துக்கொண்டுதான் வந்திருக்கிறேன்.

### ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியை ஊழல் ஆட்சி என்கிறது சி.ஏ.ஜி.!

அந்த சி.ஏ.ஜி. என்ன சொல்கிறது என்றால், ஒன்றியத்தில் நடைபெறும் பா.ஜ.க. ஆட்சி ஊழல் ஆட்சி. முறைகேடுகள் அதிகம் கொண்ட ஆட்சி. லஞ்ச லாவண்யம் பெருத்துப் போன ஆட்சி என்று சொல்கிறது. நாங்கள் சொல்லவில்லை. எதிர்க்கட்சி சொல்லவில்லை. நாங்கள் சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். நாங்கள் ஏற்கனவே சொல்லிக் கொண்டிருக்கிறோம் அது வேறு. இப்போது யார் சொல்கிறார்? சி.ஏ.ஜி. சொல்கிறது. மத்திய கணக்குத் துறையின் அறிக்கை சொல்கிறது.

ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. ஒன்று, இரண்டு அல்ல ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

- பாரத்மாலா திட்டம்
- துவாரகா விரைவுப் பாதை கட்டுமானத் திட்டம்
- சுங்கச் சாவடி கட்டணங்கள்
- ஆயுஷ்மான் பாரத் திட்டம்
- அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம்
- கிராமப்புர அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம்
- எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்டம்

### ஏழு திட்டங்களில் நடைபெற்ற மோசடிகள்!

இந்த ஏழு திட்டங்களிலும் பல கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது என்று மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது சி. ஏ. ஜி. நிதியைக் கையாளுவதில் மோசடிகள் அரங்கேறி இருக்கிறது என்று இந்த அறிக்கை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி இருக்கிறது.

* அதாவது, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 99999 99999 என்ற ஒரே போலி செல்போன் நம்பரில் 7.5 லட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டு ஊழல் நடந்திருக்கிறது. எவ்வாறு பச்சையாக ஒரு மோசடியை செய்திருக்கிறார்கள் பாருங்கள்!

* ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற நோயாளிகளில், 88 ஆயிரத்து 760 பேர் இறந்துவிட்டார்கள். ஆனால், அவர்கள் இறந்த பிறகும், சிகிச்சை அளிக்கப்படுவதாக சொல்லி, 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

தகுதியில்லாத குடும்பங்கள் இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டு, சுமார் 22 கோடியே 44 லட்சம் ரூபாய் வரை மோசடி நடந்திருக்கிறது. இதை நாங்கள் சொல்லவில்லை. எங்கள் இந்தியா கூட்டணி சொல்லவில்லை. இதைக் கண்டுபிடித்து, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஆய்வறிக்கை வெளியிடும் சி.ஏ.ஜி. அறிக்கை சொல்கிறது.

* துவாரகா விரைவு நெடுஞ்சாலைத் திட்டத்தில், ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி ரூபாயாக இருந்த செலவு 250 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நன்றாக கவனியுங்கள்! திட்ட மதிப்பை விட, 278 மடங்கு கூடுதல் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

### சுங்கச் சாவடிகளில் பல ஆயிரம் கோடி மோசடிகள்!

* அயோத்தியில் ராமாயணம் தொடர்புடைய இடங்களை நவீனப்படுத்துகிறோம் என்று சொல்லி ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். இதில் விதிமுறைகளை மீறி ஒப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற சலுகைகள் தரப்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கு 8 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

* பாரத்மாலா திட்ட டெண்டர் முறைகேடுகளை சி.ஏ.ஜி. அம்பலப்படுத்தி இருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் தொலைவு நெடுஞ்சாலை அமைக்க நிர்ணயித்ததை விட, இரண்டு மடங்கு அதிகமாக நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

* நாடு முழுவதும் சுமார் 600 சுங்கச்சாவடிகள் இருக்கிறது. இதில் 5 சுங்கச்சாவடிகளை மட்டும் சி.ஏ.ஜி. ஆய்வு செய்திருக்கிறது. அதில் விதிகளுக்குப் புறம்பாக, 132 கோடியே 5 லட்சம் ரூபாயை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வாகன ஓட்டிகளிடம் இருந்து வசூலித்திருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கும் பரனூர் சுங்கச்சாவடியும் இதில் ஒன்று. இந்த ஒரே ஒரு சுங்கச்சாவடியில் மட்டும் ஆறரை கோடி ரூபாய் முறைகேடாக வசூலித்திருக்கிறார்கள். எனவே நாடு முழுவதும் ஆய்வு நடத்தினால், பல ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு வெளிச்சத்திற்கு வரும் என்று அந்த ஆய்வறிக்கை சொல்கிறது.

* இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் விமான எந்திரம் வடிவமைப்பில் 159 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

* ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டப் பணத்தை எடுத்து ஒன்றிய அரசு விளம்பரத்துக்காகப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

### ஒன்றிய உள்துறை அமைச்சக அதிகாரிகள் மீது அதிக ஊழல் புகார்!

இவ்வாறு என்னென்ன முறைகேடுகள்? எவ்வளவு கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது என்று மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்த ஆய்வறிக்கை அந்த நிறுவனம் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது.

அதே சி.ஏ.ஜி. அறிக்கையின்படி ஒன்றிய அரசுத் துறைகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருக்கிறது.

ஊழலைப் பற்றி ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அதிகம் கவலைப்படுகிறார்.

இன்னொரு அமைப்பு சென்ட்ரல் விஜிலென்ஸ் கமிஷன், அதாவது சி.வி.சி. என்ன சொல்கிறது என்றால், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் சில நாட்களுக்கு முன்பு அறிக்கை வெளியிட்டு இருக்கிறது.

ஒன்றிய அமைச்சகங்களிலேயே உள்துறை அமைச்சக அதிகாரிகள் அலுவலர்கள் மேல்தான் கடந்த வருடம் அதிகமான ஊழல் புகார்கள் பதிவாகி இருக்கிறது. இதையும் நான் சொல்லவில்லை. சி.வி.சி. அறிக்கைதான் சொல்கிறது.

அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால், ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு எதிராக, கடந்த ஆண்டு மட்டுமே, 1 லட்சத்து 15 ஆயிரத்து 203 புகார்கள் பதிவாகி இருக்கிறது. இதில் உள்துறை அதிகாரிகள் மீது மட்டும் 46 ஆயிரத்து 643 புகார்கள் பதிவாகி இருக்கிறது.

### பி.ஜே.பி.யின் ஊழல்களை பேசுவதால் மிரட்டப் பார்க்கிறார்கள்!

இவர்கள்தான் ஊழலை ஒழிக்கப் போகிறோம் என்று இன்றைக்குப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இவர்கள் செய்த தவறை எல்லாம் மூடி மறைத்து, நம்மீது வீண்பழியை சுமத்தி, இவற்றைப் பற்றி எல்லாம் தி.மு.க. பேசுகிறதே, தி.மு.க. கூட்டணி கட்சிகள் பேசுகிறதே என்று ஆத்திரம் ஏற்பட்டு, கோபம் ஏற்பட்டு, எரிச்சலில் நம்மை பழி வாங்குவதற்காக இன்றைக்கு சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமானவரித்துறை என்று நம்மை எல்லாம் மிரட்டி பார்க்கிறார்கள்.

இதையெல்லாம் கண்டு அஞ்சி நடுங்கி விடுகிற கட்சி தி.மு.க. அல்ல. தி.மு.க என்பது பனங்காட்டு நரி. இந்த சலசலப்புக்கு எல்லாம் நாம் அஞ்சி விடமாட்டோம். எமர்ஜென்சியையே பார்த்தோம். எமர்ஜென்சியையே எதிர்த்தோம். எனவே எதைப் பற்றியும் தி.மு.க. கவலைப்படத் தயாராக இல்லை. அதேபோல் இந்தியா கூட்டணியும் இதைப் பற்றி கவலைப்படவும், சிந்திக்கவும் தயாராக இல்லை.

### மதவாதத்தை வைத்து இனியும் மக்களை ஏமாற்ற முடியாது!

எனவே தங்களுடைய லஞ்ச லாவண்யங்களை மூடி மறைப்பதற்காக, இன்றைக்கு மதவாதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டு மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள். இனி வரும் காலகட்டங்களில் தமிழ்நாட்டு மக்களை மட்டுமல்ல, இந்தியாவையும் நீங்கள் ஏமாற்ற முடியாது. அதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகத்தான் இந்தியா கூட்டணி அமைந்திருக்கிறது. அந்த இந்தியா கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இடம்பெற்றிருக்கிறது என்று உங்களுக்கு நன்றாக தெரியும். அந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போர் வீரர்களில் ஒருவராக விளங்கிக் கொண்டிருப்பவர்தான் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் அவர்கள்.

அந்த செல்வராஜ் அவர்கள் இல்லத்தில் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகிறேன். எனவே மணவிழா காணும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய் இருந்து, உங்கள் வாழ்க்கையை நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஒன்றியத்திலும் நல்லாட்சி மலர நீங்கள் துணை நிற்க வேண்டும்!

எப்படி தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சி உருவாகுவதற்கு, திராவிட மாடல் ஆட்சி உருவாக்குவதற்கு காரணமாக இருந்தீர்களோ, அதேபோல் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றியத்தில் ஒரு சிறப்பான ஆட்சி உருவாக நீங்கள் எல்லாம் காரணமாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு, வாழ்க மணமக்கள்ஞ் வாழ்க மணமக்கள் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# ஆளுநரின் அடாவடி அரசியலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

ஆளுநரின் அடாவடி அரசியலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி, தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்த அரசுப் பணியாளர் தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர் நியமனக் கோப்பை திருப்பி அனுப்பியுள்ளார். மக்கள் தேர்வு செய்து அமைத்துள்ள மாநில அரசுக்கு எதிராக ஆர். என். ரவி தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். அண்மையில் நீட் தேர்வு எழுதிய மாணவர்களையும், பெற்றோர்களையும் ஆளுநர் அழைத்துப் பேசி ஆத்திரமூட்டிய செயலை தமிழ்நாடு வெகுண்டெழுந்து கண்டித்தது. தமிழ்நாட்டின் உணர்வை ஒன்றிய அரசு அலட்சியப்படுத்தி, மாணவர்களும், பெற்றோர்களும் தற்கொலைக்கு நெட்டித் தள்ளப்படுகின்றனர்.

ஆளுநர் பொறுப்புக்கு ஆர். என். ரவி எள் முனையளவும் தகுதியற்றவர் என்பதால் அவரை அந்தப் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என குடியரசுத் தலைவரிடம் முறையிட்டு ஓராண்டு காலம் முடிந்த பிறகும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என்பது ஜனநாயக ஆட்சி முறைக்கு ஏற்றதல்ல. அரசியல் அமைப்பு சட்டத்தின் அத்துமீறல் நடக்காமல் கண்காணிக்கும் கடமைப் பொறுப்பை குடியரசுத் தலைவர் நிறைவேற்ற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

நாட்டின் சுதந்திர தினவிழாவில் 55 ஆயிரம் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என முதலமைச்சர் அறிவித்துள்ள நிலையில், அதனை நிறைவேற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை தேர்வு செய்து, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்க மறுத்து ஆளுநர் திருப்பி அனுப்பி இருப்பது தமிழ்நாடு மாநில மக்களின் அரசியல் உரிமைக்கு எதிரானது, அதிகார ஆணவத்தின் வெளிப்பாடு. பணியாளர் நியமனம் தொடர்பான அதிகாரம் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சிக்கு தான் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி மாநில அரசுக்கு எதிராக கலகம் நடத்தும் வன்மத்துடன் செயல்பட்டு வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டம் மாநில அரசின் அதிகாரங்களாக வழங்கியுள்ள குடிமக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்படுவதை தமிழக மக்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை ஆர்.என்.ரவி உணர வேண்டும். அவர் செல்லும் இடங்களில் அவரது ஜனநாயக அத்துமீறலை கண்டித்து, கறுப்புக்கொடி காட்டுவது உள்ளிட்ட ஒன்றுபட்ட போராட்டங்களை நடத்துவார்கள் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது என கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் எச்சரித்துள்ளார்.

# சேமங்கலம் எஸ்.பாஸ்கர் மறைவுக்கு இரங்கல்

சேமங்கலம் எஸ்.பாஸ்கர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு:

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் திருவாரூர் மாவட்ட முன்னணி ஊழியர் சேமங்கலம் எஸ். பாஸ்கர் (52) காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். தோழர் எஸ். பாஸ்கர் எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் அனைவருடனும் நெருங்கி பழகும் சுபாவம் கொண்டவர். முதுநிலை பட்டப் படிப்பு முடித்தவர், ஆய்வு நிறை கல்வியில் தேர்ச்சி பெற்றவர். பள்ளியில் பயிலும் காலத்திலும் பின்னர் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தில் இணைந்து இடதுசாரி அரசியல் பாதையில் பயணிக்க தொடங்கியவர். தற்போது இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் திருவாரூர் ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியத் தலைவர் பொறுப்பில் செயல்பட்டு வருபவர். பொதுமக்கள் நலனில் அக்கறை கொண்டு, முனைப்புடன் செயல்பட்டு வந்த எஸ். பாஸ்கர் மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாதது. அவரது வாழ்விணையர் செல்வராணி, ராபின் என்கிற மகனும், சரண்யா என்கிற மகளும் இருக்கிறார்கள். எஸ். பாஸ்கர் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து நிற்கும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு ஆபத்து!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்ப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கை:

ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கை 2020 வழக்கொழிந்து போக வேண்டிய வருணாசிரம, சனாதன கருத்தியலின் நவீன வடிவமைப்பு என்பதால் நாடு முழுவதும் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அதனை நிறுத்தி வைத்து, அது தொடர்பான வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இப்போது அந்த வல்லுநர் குழு நீண்ட சில நூறு பக்கங்கள் கொண்ட அறிக்கையை பரிந்துரைகளுடன் வெளியிட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வி நிலையில் ஆண்டுக்கு இரு பொதுத் தேர்வு என்ற புதிய தேர்வு முறை அறிவிக்கப்பட்டுள்ளது. இரு முறை தேர்வில் எந்தத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளதை மாணவர்கள் அடுத்த நிலைக்கு செல்ல பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதில் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதாக தெரிவித்திருந்தாலும், உண்மையில் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டு, பட்டியலின பழங்குடி மாணவர்களை வடிகட்டி வெளியேற்றும் நோக்கம் கொண்டதாகும். ஏற்கனவே தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்து நடைமுறைப்படுத்தி வரும் "நீட்" தேர்வு காரணமாக ஆயிரக்கணக்கில் பயிற்சி மையங்கள் உருவாகி பணம் பறிக்கும் கும்பல் கலாச்சாரம் வளர்ந்து வருகிறது. அதன் எதிர் விளைவாக அடித்தட்டு மக்களின் குழந்தைகளும். தேர்வு முறையால் அச்சப்பட்டு பதற்றமடையும் குழந்தைகளும் தற்கொலை சாவுக்கு நெட்டித் தள்ளப்பட்டு வருவதை தமிழ்நாடு கண்டு வருகிறது. இந்த நிலையில் பாஜக ஒன்றிய அரசு பள்ளிக் கல்வியில் ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு என்று அறிவித்திருப்பது, கல்வித் துறையில் தொடர்ந்து நடத்தும் தாக்குதலாகும். இதில் அண்மையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா "பிற மொழிகளை (மாநில மொழி தமிழ் நாட்டில் தமிழ்) தாய் மொழியாக கொண்டவர்கள் இந்தி மொழியை எதிர்ப்பின்றி ஏற்க வேண்டும் என்று அகங்காரத்துடன் பேசிய பேச்சுக்கு செயல் வடிவம் தரும் முயற்சியாகும். அரசின் வஞ்சகத் திட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆண்டுக்கு இருமுறை பொதுத் தேர்வு அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. இவ்வாறு தனது அறிக்கையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கூறியுள்ளார்.

### ஏ.ஐ.டி.யூ.சி. கட்டத்தொழிலாளர் பேரவை தீர்மானம்

# விவசாயி, தொழிலாளி இணைந்து போராட வேண்டும்

## கோவையில் கே. சுப்பராயன் எம்.பி பேச்சு




தமிழ்நாடு ஏ. ஐ. டி. யூ. சி. கட்டடத் தொழிலாளர் சங்கத்தின், அரசியல் விளக்க பேரவை கூட்டம், கோவை காந்திபுரத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய ஏ.ஐ.டி.யு.சி. தேசிய துணை தலைவரும், திருப்பூர் மக்களவைத் உறுப்பினருமான கே. சுப்பராயன் பேசும்போது, "தொழிலாளர்கள் விவசாயிகளையும் இணைத்துக் கொண்டு போராட வேண்டும். விவசாயி, தொழிலாளி இணைந்த ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் தான் எதிர்கால அரசியல் போக்கை மாற்ற முடியும்.

டெல்லியில் விவசாயிகள் பிரம்மாண்டமான போராட்டத்தை நடத்தினார்கள். அதில் தொழிலாளி வர்க்கம் பங்கு பெற்றது. தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு போராட்டங்களிலேயும், விவசாயிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும். விவசாயிகள் நடத்துகிற கூட்டங்கள் மற்றும் போராட்டங்களில் தொழிலாளி வர்க்கம் பங்கு பெறுவதும், தொழிலாளி வர்க்கம் நடத்துகிற போராட்டங்களில் விவசாயிகள் பங்கு பெறுவதும் காலத்தின் அரசியல் அவசியம். ஒன்றியத்தில் ஆளுகிற அரசு கார்ப்பரேட் நலனை காப்பாற்றுகிற அரசு. அது சிறு குறு நிறுவனங்களை அல்ல, பகாசுர கம்பெனிகளின் லாபத்தை அதிகரிக்கவும், அவர்களுக்கு விதிக்கப்படுகிற வரிகளை குறைக்கவும் இந்த அரசாங்கம் பயன்படுத்தப்படுகிறது. எனவேதான் ஒன்றிய அரசு கார்ப்பரேட் நலன் சார்ந்த அரசு என்று நாம் சொல்லுகிறோம்.

இது தொழிலாளி வர்க்க அரசு அல்ல, விவசாய வர்க்கம் நலன் சார்ந்த அரசும் அல்ல, கார்ப்பரேட் நலனை காப்பாறுகிற அரசு. எனவே, இந்த அரசாங்கத்தை மாற்றாத வரை நம்முடைய முன்னேற்றம் பின்தங்கியே இருக்கும் என்றும் கே.சுப்பராயன் எம்.பி. குறிப்பிட்டார்.

இந்தப்பேரவை கூட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட கௌரவத் தலைவர் காளப்பட்டி கே. செல்வராஜ், துணைத்தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், மூத்த தலைவர் எஸ். பி. தியாகராஜன், துணைத் தலைவர் ஜே.கலா, மாநில செயலாளர் சி. நந்தினி ஆகியோர் தலைமை வழங்கினார். மாவட்ட பொதுச் செயலாளர் எல். செல்வம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கட்டிட தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.செல்வராஜ், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவர் சு.பழனிசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், ஏ ஐ டி யு சி மாவட்ட கவுன்சில் பொதுச் செயலாளர் சி.தங்கவேல் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கோவை மாவட்டத்தில் செங்கல் உற்பத்தியை துவங்குவதற்கு மாவட்ட நிர்வாகம் உரிய அனுமதியை வழங்கிட வேண்டும்.

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலவாரியத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்ட படி போனஸ் வழங்க வேண்டும்.

பெண் கட்டுமான தொழிலாளர் ஓய்வு பெறும் வயதை 55 என்பதையும், மாத ஓய்வூதியம் ரூ 2000 என்ற முடிவையும் உடனடியாக தமிழ்நாடு அரசு ஏற்று அரசாணை வெளியிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டம் 2023 நிறுத்தி வைக்க வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கூட்டறிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாநில பொதுச்செயலாளர் பி. எஸ். மாசிலாமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் சாமி. நடராஜன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த கூட்டத்தொடரின் இறுதி நாளில் 17 சட்ட மசோதாக்களை கொண்டு வந்து சட்டமன்றத்தில் எவ்வித விவாதமும் இல்லாமல் தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. இதில் மிக முக்கியமான சட்டம், தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டம் 2023. இந்த சட்டத்தின் மூலம் அரசு அறிவிக்கும் சிறப்பு திட்டங்களுக்கு 100 ஹெக்டேர் வரை உள்ள நிலங்களில் உள்ள நீர்நிலைகள், நீர்வழிப்பாதைகள் உட்பட தனியாரிடம் கொடுப்பதற்கு இச்சட்டம் வழிவகை செய்கிறது.

நிலம் கையகப்படுத்துவதற்கு ஏற்கனவே பல சட்டங்கள் உள்ள நிலையில், அந்த சட்டங்களில் குறிப்பிட்டுள்ளபடி, புதிய திட்டங்களுக்கு விவசாயிகளிடம் நிலத்தை கையகப்படுத்தும் போது நியாயமான சட்டப்படியான இழப்பீட்டை பெறுவதற்கே விவசாயிகள் போராடித்தான் பெற வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள புதிய நில ஒருங்கிணைப்பு சட்டம் எந்த வகையிலும் ஏழை சிறு, குறு, நடுத்தர விவசாயிகளின் உயிர்நாடியாக உள்ள நிலங்களை பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளை பாதுகாத்திடவும் உதவாது.

மாறாக, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் நீர்நிலைகளை தனியாருக்கு தாரை வார்க்கத்தான் இந்த சட்டம் பயன்படும். எனவே, மாநில அரசு இச்சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி இரண்டு தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களும் 17.5.2023 அன்று மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம். இதுகுறித்து சென்னையில் பல்வேறு அமைப்புகள் இணைந்து கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்று இச்சட்டத்தை மாநில அரசாங்கம் திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் துவக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கையெழுத்திட்டுள்ளனர். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி 22.6.2023 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டமும் சென்னையில் நடைபெற்றது.

மேலும், பல்வேறு விவசாய அமைப்புகளும், பொதுநல அமைப்புகளும் இச்சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி வந்த நிலையில், தமிழ்நாடு அரசு இவற்றிற்கெல்லாம் கொஞ்சமும் மதிப்பளிக்காமல் தமிழக ஆளுநரின் ஒப்புதலை பெற்று 17.8.2023 அன்று மாநில அரசிதழில் வெளியிட்டிருப்பதை வன்மையாக கண்டிக்கிறோம். தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளையும், நிலங்களையும் சிறப்பு திட்டம் என்ற பெயரில் பெரும் நிறுவனங்கள் கையில் ஒப்படைக்க உதவிடும் இந்த தமிழ்நாடு நிலஒருங்கிணைப்புச் சட்டம் 2023ஐ நடைமுறைப்படுத்தாமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசை வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.

## நவ. 26,27,28 விவசாயிகள் விவசாய தொழிலாளர்கள் பங்கேற்க சென்னை ஆளுநர் மாளிகை முன் முற்றுகைப் போராட்டம்

## ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் மாநில அளவிலான

# கோரிக்கை பொது மாநாடு முடிவு





**தமிழ்நாடு அமைப்பின் சார்பில் ஆகஸ்ட் 29ஆம் நாள் திருச்சியில் அகில இந்திய அமைப்பு முடிவின்படி மாநில அளவிலான கோரிக்கை பொது மாநாடு மிக எழுச்சியுடன் நடைபெற்றது.**

தொடக்கத்தில் எஸ். கே. எம் கொடியை ஏற்றி வைத்துவிட்டு டெல்லி போராட்டத்தில் உயிர் நீத்தோர்களின் நினைவு நிழல் படங்களுக்கு அஞ்சலி செலுத்தி மாநாடு தொடங்கியது.

திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அயிலை சிவ. சூரியன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்) வரவேற்று பேசினார். எஸ். கே மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமைவகித்தார்.

த. இந்திரஜித், ஆ. க. தமிழாதன், செழியன், அ.ரவிக்குமார், ஜெ. சம்சுதீன், எம்.ஷைனி, ஏ. கென்னடி முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு முழுதும் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் தொழிலாளர்கள் ஆர்வலர்கள் பங்கு கொண்டனர். அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் தலைவர் வெங்கையா அவர்கள் மற்றும் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் துணைத் தலைவர் ஹன்னன் முல்லா முன். எம்பி அவர்கள் ஆகிய அகில இந்திய செயற்குழு உறுப்பினர்கள் சிறப்புரையாற்றினர்.

இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் எஸ். குணசேகரன் முன். எம். எல். ஏ, பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சாமி. நடராஜன், முகமது அலி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளர் அ. பாஸ்கர், விவசாய தொழிலாளர் சங்க பொதுசெயலர் வி. அமிர்தலிங்கம், அ. சந்திரமோகன், கா. பசுமை வளவன், கே. வி. இளங்கீரன், சந்திர போஸ், பொன்னையன், காளிராஜ், மேரி லில்லி பாய் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் விரிவாக பேசினர்.

தொடக்கத்திலும் முடிவிலும் கோவன் கலை நிகழ்ச்சி எழுச்சியுடன் நடைபெற்றது. எஸ். கே. எம், அகில இந்திய அமைப்பின் முடிவின்படி நவம்பர் 26 27 28 மூன்று நாட்கள் சென்னை ஆளுநர் மாளிகை முன் தொடர் முற்றுகை போராட்டம் நடத்திட முடிவெடுக்கப்பட்டது. ஆர். நடராஜன் நன்றியுரை ஆற்றினார்.

### தீர்மானம்

13 மாதங்கள், முப்பருவ காலங்களிலும் நடைபெற்ற போராட்டம், 780 பேர் உயிரிழந்த நிலையிலும் தொய்வில்லாமல் போராடிய விவசாயிகளுக்கு, ஒன்றிய அரசின் சார்பில் பிரதமர் மோடி அரசு, கோரிக்கைகளைத் தீர்த்து வைப்போம் என்று எழுதி கொடுத்ததின் அடிப்படையில், அன்றைய போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. உறுதி அளித்து, எழுதி கொடுத்து 20 மாதங்கள் கடந்த பின்பும், ஒத்துக்கொண்டபடி கோரிக்கைகள் எதையும் நிறைவேற்றாதது மட்டுமல்ல, மின்சார திருத்த மசோதாவை மீண்டும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். மீண்டும் முந்தைய வேளாண் சட்டங்களைக் கார்ப்பரேட்டுகளுக்கு உறுதி அளித்தபடி வேறு வடிவில் கொண்டுவர ஒன்றிய அரசு முனைகிறது.

எனவே எஸ். கே. எம். அகில இந்திய அமைப்பு முடிவு செய்துள்ளபடி, போராட்டத் தளங்களை மாநிலங்களில் குவிப்போம். அதன் ஒரு அங்கமாக தமிழ்நாட்டில், சென்னை ஆளுநர் மாளிகை முன் நவம்பர் 26, 27, 28 ஆகிய மூன்று நாட்கள் முற்றுகை போராட்டத்தை நடத்துவது என்றும், அதில் பல்லாயிரம் விவசாயிகள், தொழிலாளர்கள் கலந்து கொள்வது என்றும், மாநாட்டிற்கு வந்திருக்கின்ற எஸ். கே. எம். இன் மாநில, மாவட்ட நிர்வாகிகள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து முற்றுகை போராட்டத்தை வெற்றிபெற செய்ய வேண்டும் என்றும், இம்மாநாடு தீர்மானிக்கிறது.

## தமிழ்நாடு மருத்துவ மாணவர் சங்கத்தின் சார்பில் கருத்தரங்கம்

மருத்துவ மாணவர்களும், இளம் மருத்துவர்களும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் தீர்வுகளும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் திருவாரூர் எம்.எம். ஏ அரங்கில், நடைபெற்றது.

மருத்துவ மாணவி பொற்கொடி தலைமை தாங்கினார். டி.என்.எம் ய.எஸ். ஏ மாநில துணைச் செயலாளர் கார்த்திகேயன் வரவேற்பு வழங்கினார். மருத்துவ மாணவி தமிழ் நெறி ,பயிற்சி மருத்துவர் கிரி பிரசன்னா முன்னிலை வகித்தனர். அரசு அனைத்து டாக்டர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகி டாக்டர் தர்மலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மருத்துவ மாணவர் அரவிந்த் நன்றி நவின்றார். இக்கருத்தரங்கில் 150 க்கு மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டனர். நெக்ஸ்ட் தேர்வை ஒன்றிய அரசு திணிக்கக் கூடாது. இத்தேர்வை முழுமையாக திரும்பப் பெற வேண்டும். ஒன்றிய அரசு ,மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ இடங்களுக்கும் ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கை நடத்தும் முடிவையும் முழுமையாக கைவிட வேண்டும். மருத்துவ கல்வியில் மாநிலங்களின் உரிமையை ஒன்றிய அரசு பறிப்பதை கைவிட வேண்டும்.

போலி மருத்துவ அறிவியலை, மருத்துவக் கல்வியில் திணிக்கக்கூடாது, உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வண்டவாளம்

## பெண்களுக்கு எதிராக பேசும் எச். ராஜாவுக்கு உயர் நீதிமன்றம் கண்டனம்

பெண்களுக்கு எதிராக தொடர்ச்சியாக அவதூறாக பேசி வரும் எச் ராஜா வுக்கு எதிராக பல்வேறு காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் பதியப்பட்ட இந்த வழக்குகளை ரத்து செய்ய வேண்டும் என்று எச். ராஜா உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி என் ஆனந்த் வெங்கடேஷ் முன்பாக வந்தது. எச் ராஜாவின் பேச்சுக்கள் தனிப்பட்ட நபர்களை மட்டுமின்றி பெண்களை இழிவு படுத்தும் வகையிலும் வெறுப்புணர்வுகளை தூண்டும் வகையிலும் அமைந்துள்ளது இன்று வாதிடப்பட்டது. இதைத்தொடர்ந்து நீதிபதி பெண்களுக்கு எதிராக யார் பேசினாலும் ஏற்று கொள்ள முடியாது எச் ராஜா இதுபோல பேசுவது முதல் முறை அல்ல என்றும் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## நீட் தேர்வு ராஜஸ்தானிலும் 22 மாணவர்களை பலி வாங்கியது!

நீட் தேர்வு பயிற்சிக்காக நாடு முழுவதும் தனியார் பயிற்சி நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரில் அதிகமான பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஐஐடி உழவுத் தேர்வு பயிற்சிக்காக கோட்டா நகரில் பயிற்சி பெற்று வந்த பீகாரைச் சார்ந்த பால் மிகி ஜாங்கிட் என்ற 18 வயது மாணவர் தற்கொலை செய்து கொண்டார். இதேபோன்று பீகார் சம்பரன் மாவட்டத்தைச் சேர்ந்த மிஸ்ரா, ஓ பி மாநிலத்தின் ராம்பூர் நகரைச் சேர்ந்த மஞ்தோத் சாப்ராஉள்ளிட்ட 22 பயிற்சி மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளது வெளியே வந்துள்ளது என்பதுஅதிர்ச்சி அளிக்கிறது. இதில் வெளியே வராத தற்கொலைகள் எண்ணிக்கை எத்தனையோ?

## ஒன்றிய உள்துறை அமைச்சகமே ஊழலில் முதலிடம்!

ஒன்றிய உள்துறை அமைச்சரகத்துக்கு எதிராக அதிகமான ஊழல் புகார்கள் பெறப்பட்டதாக ஒன்றிய அரசின் ஊழல் கண்காணிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஒன்றிய அரசின் அனைத்து துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் ஊழியர்கள் ஆகியோருக்கு எதிராக 1 லட்சத்து 15 ஆயிரத்து 203 ஊழல் புகார்கள் பெறப்பட்டன அவற்றில் 85 ஆயிரத்து 437 புகார்கள் முடித்து வைக்கப்பட்டன.29 ஆயிரத்து 266 புகார்கள் நிலுவையில் உள்ளன அதிலும் 22 ஆயிரத்திற்கு மேற்பட்ட புகார்கள் மூணு மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளன. அதிகபட்சமாக ஒன்றிய உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஊழியர்களுக்கு எதிராக 46 ஆயிரத்து 643 புகார்கள் வந்துள்ளன. இதில் 23 ஆயிரத்து 919 புகார்கள் முடித்து வைக்கப்பட்டன.

அமைச்சகத் துறைவாரியாக குறித்து ஊழல் கண்காணிப்பு ஆணையம் பட்டியல் இட்டுள்ளது. இந்தப் பட்டியல் மூலம் பாஜக அரசின் முகமூடி கிழிந்துள்ளது.

## ராஜஸ்தான் பாஜக தேர்தல் குழுவில் வசந்தரா ராஜே சிந்தியா எங்கே?

ராஜஸ்தானில் பாஜக அமைத்துள்ள இரு தேர்தல் குழுவில் முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா இடம் பெறவில்லை. 2018 சட்டமன்றத் தேர்தலில் ராஜஸ்தானில் பாஜக அதிக தொகுதிகளை இழந்துவிட்டதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது

மேலும் 70 வயது ஆகும் சிந்தியாவுக்கு பதில் இளம் தலைவரை முதல்வராக்க பாஜக தலைமை விரும்புவதாகவும் கூறப்படுகிறது. தேர்தலுக்கு முன்பே முதல்வர் வேட்பாளரை அறிவித்தால் சிந்தியா ஆதரவாளர்களிடம் அதிருப்தி உருவாகும் என்பதால் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகவில்லை என்று கூறப்படுகிறது. சிந்தியா ஓரங்கட்டப்படுவது பாஜகவுக்கு பாதிப்பு ஏற்படுமா என்பது தேர்தல் முடிவுகளில் தெரியவரும்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

மதுரை புறநகர் மாவட்டக் குழு உறுப்பினரும், ஏஐடியுசி சங்க பொதுச் செயலாளருமான பாலகிருஷ்ணன் வளர்மதி தம்பதியினரின் மகன் முனீஸ்வர ரெங்கநாத், கோவிந்தராஜ் குருலட்சுமி தம்பதியினரின் மகள் பாலம்மாள் (எ) அமுதா ஆகியோரது திருமண நிகழ்ச்சி திருப்பரங்குன்றம் அருகிலுள்ள ஏழுர் சாலியார் திருமண மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக 2,000/ரூ மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேலிடம் வழங்கப்பட்டது.

### நலவாரிய ஓய்வூதியத்தை தாமதமின்றி வழங்க கோரி

## திருச்செங்கோட்டில் ஆர்ப்பாட்டம்

ஏஐடியுசி நாமக்கல் மாவட்ட பொது தொழிலாளர் சங்கம் சார்பாக திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு தொழிலாளர் நல வாரியத்தில் ஓய்வுதியம் பெற்று வரும் உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு நான்கு மாத ஓய்வூதியம் வழங்காததை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தலைவர் எஸ். ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி. தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ். ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் க. அன்புமணி, சிபிஐ நகர செயலாளர் எஸ். சுகுமார், சிபிஐ ஒன்றிய செயலாளர் பி. எஸ். முனுசாமி, சிபிஐ நகர துணைச் செயலாளர் பி. கார்த்திக், ஹெச். எம். எஸ். மாவட்ட செயலாளர் ஏ. கலைவாணன், ஈ. பி. எஃப் பென்சனர்கள் சங்க மண்டல செயலாளர் பி. சண்முகம் ஆகிய தோழர்கள் கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள்.

உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு நான்கு மாதம் ஓய்வூதியம் வழங்காமல் முதியவர்கள் பாதிக்கப்படுவதை தமிழக அரசு கருத்தில் கொண்டு நிலுவையில் உள்ள ஓய்வூதியத் தொகை உடன் வழங்க நடவடிக்கை வேண்டும். கட்டுமான உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு மாதம் 5ம் தேதிக்குள் ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# மணிப்பூரை மநுப்பூராக மாற்றிய பாஜக

**இணைய வழி கருத்தரங்கம்**

மணிப்பூர் கலவரத்தை கட்டுபடுத்த வக்கில்லாத ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், மணிப்பூர் மாநில அரசை கலைத்திடக் கோரியும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் இளம் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இணையவழியில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு இளம் பெண்கள் மாநில ஒருங்கிணைப்பாளர் கலை. அஸ்வினி தலைமை தாங்கினார். இந்தியாவிலேயே சாதியற்றவர் சான்றிதழ் முதல் பெண்மணியும், மனித உரிமை செயற்பாட்டாளருமான ம. ஆ. சினேகா, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் ஜி. மஞ்சுளா கருத்துரை வழங்கினார். நிறைவாக, இணை ஒருங்கிணைப்பாளர் ஆர். பவிதாரணி நன்றியுரையாற்றினார். இக்கருத்தரங்கில், சுமார் நூற்றுக்குமேற்பட்ட இளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டம் நாங்குநேரியில்

## சாதிவெறி தாக்குதலுக்கு ஆளான மாணவர், மாணவிக்கு ஆறுதல்

நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் மாணவர், மாணவி சாதிவெறி தாக்குதலில் காயமுற்று பாளை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன், தென்காசி பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரி.லிங்கம், நெல்லை மாவட்ட செயலாளர் செ. லட்சுமணன், நாங்குநேரி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.வி. கிருஷ்ணன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க நெல்லை மாவட்ட செயலாளர் பி.சுகுமாரன், மாவட்ட குழு உறுப்பினர் எம். லெனின் முருகானந்தம், உதயகுமார், முருகன், கோவில்பட்டி பாபு, முத்துலட்சுமி ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர். பின்னர் வள்ளியூரில் அவர்கள் பயின்ற பள்ளியின் தலைமை ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு வந்தனர். இதில் ராதாபுரம் தாலுகா செயலாளர் ஏ. சேதுராமலிங்கம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா விடைகள்

1. விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசியக்குழு (Indian National Committee for Space Research - INCoSpaR)
2. ஆதித்யா எல்1 விண்கலம்
3. 500 கோடி ஆண்டுகள்
4. ஆறு மாதம் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.
5. பகத்சிங் எழுதிய "நான் ஏன் நாத்திகனானேன்?" நூலை மொழிபெயர்த்ததற்காக.
6. மக்மோகன் எல்லைக்கோடு

# பவானி தினசரி காய்கறி மார்க்கட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் மாற்ற வேண்டும்

**ஈரோடு வடக்கு மாவட்ட குழு தீர்மானம்**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட பொதுக்குழுக் கூட்டம், இரா. ஸ்டாலின் சிவக்குமார் தலைமையில், சத்தியமங்கலம் ஜீவா அரங்கத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில்,கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன்,முன்னாள் சட்டமன்றஉறுப்பினர் பி. எல். சுந்தரம், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர் டி. ஏ. மாதேசுவரன், மாவட்டக் கட்சியின் செயலாளர் எஸ். மோகன்குமார்,துணைச் செயலாளர்கள் ஜி. வெங்கடாசலம், கே. சக்திவேல், மாவட்ட கட்சியின் பொருளாளர் பி. என். ராஜேந்திரன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியச் செயலாளர்கள் பங்கேற்றனர்.

கட்சியின் மாநிலச்செயலாளர் இரா. முத்தரசன்,கட்சியின் மாநிலப் பொதுக்குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

**பட்டியலினத்தவர் வழிப்பாதையை ஆக்கிரமிக்க முயற்சி**

பவானி வட்டம்,மைலம்பாடி ஊராட்சி,சோலையம்பாளையத்தில்,1962 ஆம் ஆண்டு,பட்டியலினத்தவர் 25 பேர்களுக்கு,ஆதி திரவிடர் நலத்துறை மூலம் வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டது.

25 பட்டியலின குடும்பத்தினர் கடந்த 60 ஆண்டுகளாக இங்கு வசித்து வருகின்றனர். இம்மக்கள் பயன்படுத்தி வந்த ஊருக்குச் செல்லும் வழிப்பாதையை தற்போது சிலர் வருவாய்த் துறையின் துணையோடு ஆக்கிரமிக்க முயன்று வருகின்றனர். மாவட்ட நிரவாகம்,இதில் கவனம் செலுத்தி, சோலையம் பாளையம் மக்கள் பயன்படுத்தி வரும் வழிப்பாதையை யாரும் ஆக்கிரமிப்பு செய்யாமல், எப்போதும் போல் பயன்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

**பவானி தினசரி காய்கறி மார்க்கட்**

பவானியில் தற்போது தினசரி காய்கறி மார்க்கட் இயங்கிவரும் இடம்,போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடமாகும். இதனால்,பொதுமக்கள்வியாபாரிகள் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால்,காய்கறி மார்க்கட்டை புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள போக்குவரத்து வசதி மிக்க இடத்திற்கு மாற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### ஒன்றிய அரசைக் கண்டித்து ராமநாதபுரத்தில்

# இந்தியா கூட்டணியினர் ஆர்ப்பாட்டம்



ராமநாதபுரம் அரண்மனை முன்பு இந்தியா கூட்டணி சார்பில், ஒன்றிய அரசைக் கண்டித்து இந்திய யூனியன் முஸ்லிம் ராமநாதபுரம் மாவட்ட தலைவர் ஏ. வருசைமுகம்மது தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில்....

ஒன்றிய மோடி அரசின் மதவாத வெறுப்பரசியல், மக்களைப் பிரிக்கும் பிரிவினைவாதம், நாடாளுமன்ற ஜனநாயகத்தை சீர்குலைப்பது... விவசாயிகள், தொழிலாளர்கள், நலனுக்கு எதிராகச் செயல்படுவது, கார்பரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாகவும் இந்திய நாட்டின் இறையாண்மை மற்றும் எதிராகவும் ,சமூக நீதிக்கு ஆட்சி செய்யும் மோடி அரசை அகற்றுவோம் என்று வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சிகளின் மாவட்ட, நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

### தருமபுரி தொழிலாளர் நலவாரிய அலுவலகம் முன்பு

# ஏஐடியூசி கட்டுமான தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



கட்டுமான தொழிலாளர்களின் கண்காணிப்புகுழு கூட்டத்தை 3 மாதத்திற்கு ஒருமுறை கூட்ட வலியுறுத்தியும், தொழிலாளர் நல வாரிய அலுவலர்களின் செயல்பாடுகளை கண்டித்தும், தமிழ்நாடு ஏஐடியூசி கட்டடத் தொழிலாளர்கள் சங்கத்தின் தருமபுரி மாவட்டக்குழு சார்பில் தொழிலாளர் நலவாரிய அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் எம். வி. குழந்தைவேலு தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஏ. சி. மணி கோரிக்கைகள் குறித்து பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக்குழு உறுப்பினர் எஸ். தேவராசன், ஏஐடியூசி மாநில செயலாளர் எஸ். சின்னசாமி, விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர் ஜெ. பிரதாபன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே. மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஆர்பாட்டத்தில் தொழிலாளர் நல வாரிய அலுவலகத்தில் தொழிலாளர்கள் ஆன்லைன் பதிவு செய்வதில் உள்ள குறைபாடுகளை சீர்படுத்திட வேண்டும். அமைப்புசாரா நலவாரியத்திற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கிடு செய்து நலவாரியத்தின் பலன்களை உடனே வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டுமான தொழிலாளர்களின் கண்காணிப்புகுழு கூட்டத்தை 3 மாதத்திற்கு ஒருமுறை நடத்த வேண்டும். தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், தொழிலாளர்களுக்கு எதிராக செயல்படுவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

# நெல்லை எம்.எஸ்.பாலகிருஷ்ணன் மறைவுக்கு இரங்கல்

நெல்லை மாவட்ட ஏஐடியூசி பொருளாளரும், நெல்லை மாவட்ட கட்டிட தொழிலாளர் சங்க செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம். எஸ். பாலகிருஷ்ணன் மறைவுக்கு அஞ்சலி கூட்டம் நடைபெற்றது .

கூட்டத்திற்கு நெல்லை மாவட்ட ஏ. ஐ. டி. யூ. சி. பொதுச் செயலாளருமான ஆர். சடையப்பன் தலைமையேற்றார். தமிழ்நாடு ஏ. ஐ. டி. யூ. சி. தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், கட்டிட தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் என். செல்வராஜ், நெல்லை மாவட்ட செயலாளர் செ. லட்சுமணன், ஏ. ஐ. பி. இ. ஏ. தலைவர் ஆர். ரெங்கன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ். வி. கிருஷ்ணன், போக்குவரத்து தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் என்.உலகநாதன், தூத்துக்குடி கிருஷ்ணராஜ், எட்டயபுரம் சேது, மதுரை முருகன், விவசாய தொழிலாளர் சங்கம் செயலாளர் எஸ். ஏ.பி. பாலன், களக்காடு ஒன்றிய செயலாளர் கே. முருகன், சிபிஐ நெல்லை மண்டல உதவி செயலாளர் பொ. கிருஷ்ணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தூய்மை பணியாளர்களின்
# ஊதியத்தை உயர்த்திய தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு






மருத்துவப் பணியாளர்களாக, பணி நியமனம் செய்து, ஊதிய உயர்வு வழங்குவதாக தமிழ்நாடு அரசு உறுதியளித்துள்ளது.

ஆர். சி. எச் தூய்மை பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கையை நிறைவேற்றியமைக்காக, தமிழ்நாடு அரசிற்கு நன்றி பாராட்டும் விழா, சென்னை சைதாப்பேட்டையில் பனகல்மாளிகை அருகில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கத்தின் கௌரவத் தலைவர்டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் தலைமை தாங்கினார். சங்கத்தின் மாநிலத் தலைவர் என்.எஸ்.செல்வராஜ் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர், விடுதலைப் போராட்ட வீரர் இரா. நல்லகண்ணு வாழ்த்துரை வழங்கினார்.

ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன், தமிழ்நாடு ஏஐடியூசி யின் மாநில பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன், ஆர். சி. எச் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஏ. ஆர். சாந்தி,

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளர் டாக்டர் ஜி. ரமேஷ், தமிழ்நாடு மருத்துவத் துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் பி. காளிதாசன் மற்றும் எஸ். தனவந்தன், எம். கீர்த்திவர்மன், என். ஸ்ரீநாத் வாசுதேவன், எஸ். ஐஸ்வர்ய லட்சுமி, எஸ். ஆறுமுகம் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். த.அ.ஆ.சு நிலைய ஆர். சி. எச் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கத்தின், மாநில பொருளாளர் எஸ். ராஜலட்சுமி நன்றி நவின்றார்.

மருத்துவத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஆர். சி .எச் திட்டத்தின் கீழ், 3000 க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக தற்காலிக அடிப்படையில், பணிபுரிந்து வருகின்றனர்.

அவர்களுக்கு கடந்த 10 ஆண்டுகளாக வெறும் ரூபாய் 1,500 மட்டுமே மாத தொகுப்பூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு பணி நிரந்தரம் வழங்க வேண்டும், ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென தொடர்ந்து போராடி வருகிறோம்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு, இத் தூய்மை பணியாளர்களில், 941 பேரை முதல் கட்டமாக, பல் நோக்கு மருத்துவப் பணியாளர்களாக பணிநியமனம் செய்து, அவர்களின் மாத ஊதியத்தை ரூபாய் 1,500 லிருந்து ,ரூபாய் 15,000 மாக உயர்த்தியுள்ளது .

பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கான, காலிப்பணியிடங்கள் உருவாகும் பொழுது, எஞ்சியுள்ள ஆர். சி. எச் தூய்மை பணியார்களையும் ,பல்நோக்கு

# விருதுநகரில் துப்புரவு பணியாளர், தூய்மை காவலர்கள் பேரணி - ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு, மாவட்ட தூய்மை காவலர், துப்புரவு பணியாளர் மற்றும் உள்ளாட்சி பணியாளர் சங்கம் சார்பில் கோரிக்கை மனு கொடுக்கும் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமை வகித்தார்.

சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி. இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி. லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ். பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர்கள் செல்வம், சக்கணன் ஆகியோர் கோரிக்கையை விளக்கி பேசினார்கள்.

தூய்மை காவலர் பணியை நிரந்தரமாக்கு, மாத சம்பளம் ரூ. 21000 வழங்கு, வீடற்ற அனைவருக்கும் இலவச வீட்டுமனைபட்டா வழங்கு, மாதஓய்வூதியம் ரூ. 9000 வழங்கு, தீபாவளி போனஸ் வழங்கிடு உள்ளிட்ட கோரிக்கை மனுவை கலெக்டர் அலுவலகத்தில் கொடுத்தனர். முன்னதாக புதிய பேருந்து நிலையத் திலிருந்து பேரணியாக கோரிக்கை முழக்கங்களுடன் ஆட்சியர் அலுவலகம் வந்தனர்.

### அரசு அறிவித்தபடி டாஸ்மாக் கடையை மூடக்கோரி
# திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

திருப்பூர் மாநகர் கொங்கு மெயின் ரோடு இஎஸ்ஐ மருத்துவமனை அருகில் ரங்கநாதபுரத்தில் 1909 எண் கொண்ட டாஸ்மாக் மதுபான கடையை அகற்றக்கோரி அப்பகுதி பொதுமக்கள் நீண்ட நாட்களாக போராடிவரும் நிலையில், தமிழக அரசின் அறிவிப்பின் பேரில் மூடப்பட வேண்டிய 500 கடைகளில் ஒன்றாக இந்த கடையும் அறிவிக்கப்பட்டிருந்தது.

நீக்க வேண்டிய கடைகளின் பட்டியலில் இருந்து இந்த கடையை எடுத்துவிட்டு வேறு கடையை மூடிவிட்டு இப்பகுதி மக்களுக்கு டாஸ்மாக் நிர்வாகம் மிகப்பெரிய அநீதியை இழைத்தது. இந்த கடையை உடனடியாக அங்கிருந்து அப்புறப்படுத்த கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்தக் கடையை மூடுவதற்கு டாஸ்மாக் மேனேஜர் கையெழுத்திட்ட உத்தரவு நகல் வெளியிடப்பட்டது.

இரண்டாவது மண்டல குழு செயலாளர் வி. எஸ். சசிகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், திருப்பூர் மாநகர துணை மேயரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினருமான ஆர். பாலசுப்பிரமணியம், மாநகர் மாவட்ட குழு செயலாளர் எஸ். ரவிச்சந்திரன் எம். சி., ஏ. ஐ. டி. யு. சி. மாவட்ட தலைவர் எம். மோகன், மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஏ. ராஜேந்திரன் எம். சி., மண்டல துணைச் செயலாளர் எஸ். விஜய், மாதர் சம்மேளன மண்டல நிர்வாகி தமிழ்ச்செல்வி உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட அப்பகுதி பெண்களும் கலந்து கொண்டனர்.

### சத்தியமங்கலத்தில்
# ஏஐடியூசி தூய்மைக் காவலர்கள் பெருந்திரள் முறையீடு!

கிராம ஊராட்சிகளில் தூய்மைக்கவலர்களாக பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, மாதந்தோறும் 5 ம்தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும்.

ஊராட்சி நிர்வாகங்கள்,சீருடை மற்றும் கையுறை போன்ற பாதுகாப்பு உபகரணங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்க வேண்டும்.

எவ்வித சமூகப் பாதுகாப்புமின்றி மக்களின் நலத்தை பாதுகாத்து வரும் இத் தொழிலாளர்களை, தாட்கோவின் தூய்மைப் பணியாளர் நல வாரியத்தில் பதிவு செய்து தர வேண்டும் என்கிற கோரிக்கைகளை வலியுறுத்தி,

சத்தியமங்கலம் தாளவாடி பவானிசாகர் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சதியமங்கலம் வருவாய் வட்டாட்சியரிடம் பெருந்திரளாக சென்று முறையிட்டனர்.

இந்த முறையீட்டுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் தலைமை தாங்கினார். சங்க செயலாளர் கே.சக்திவேல் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். பின்னர் வட்டார வளர்ச்சி அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

# பா.ஜ.க ஆட்சியை அகற்றுவோம் இந்தியாவை காப்போம்



**பிரச்சார பயணம்**

ஒன்றிய பா.ஜ.க ஆட்சியை அகற்றுவோம், இந்தியாவை காப்போம் இந்திய மக்களை பாதுகாப்போம்ர என்கிற கோரிக்கையை வலியுறுத்தி 'பிரச்சார பயணம்' கோவை கருப்பசாமி நகர் கிளையில் துவங்கி, காந்தி மாநகரில் முடிவடைந்தது.

14 மையங்களில் வி. ஆர். பாண்டியன் மண்டல துணைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பிரச்சாரத்தை மாவட்ட துணைச் செயலாளர் ஜே. ஜேம்ஸ் துவக்கி வைத்து பேசினார். இதில் மாநிலப் பொருளாளர் எம். ஆறுமுகம் எக்ஸ் எம். எல். ஏ, மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட பொருளாளர் சி. தங்கவேலு, ஏஐபிஇஏ ஏ. இப்ராகிம் ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள். மேலும் மண்டலக்குழு துணைச் செயலாளர்ஆனந்து, பொருளாளர் உமாநாத் மற்றும் மண்டலக்குழு உறுப்பினர்கள், கிளைச் செயலாளர்கள், கிளைத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# டாக்டர் நரேந்திர தபோல்கர் நினைவு நாள் கூட்டம்

விருதுநகர் தேசபந்து திடலில் பகுத்தறிவாளர் கழகம் சார்பில் டாக்டர் நரேந்திர தபோல்கர் நினைவு நாள், தேசிய அறிவியல் மனப்பான்மை நாள் விழிப்புணர்வு பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சண்முகசுந்தரம் தலைமை வகித்தார். மாவட்ட திக தலைவர் நல்லதம்பி, மாவட்ட செயலாளர் ஆதவன் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருலாளர் எஸ். பழனிக்குமார், நகர செயலாளர் முத்துக்குமார், சாத்தூர் நகர்மன்ற துணைத்தலைவர் பா. அசோக் ஆகியோர் பேசினார்கள். மதுரை பெரியார்பித்தன் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 129. ஆசினி ஆயும் ஆய்வு

**அப்பாலுக் கப்பாலுக் கப்பாலே ஆய்ந்தாலும்
இப்பாலுக் கெப்பாலும் இல்.**

அண்டவெளி ஆய்வுகள் எத்தனே முன்னேற்றத்துடன் நடைபெற்றாலும், அங்கு பல உயர்வுகளைக் கண்டாலும், இவ்வுலக உயிர்களுக்கு நிகர் எவற்றையும் காண முடியாது.

**இயற்கைக் கடிமை மனிதனன்று என்னே
இயற்கைக் கிறவனே இன்று.**

மனிதன் இயற்கையின் இயக்கத்துக்கு அடிமையாகிவிட வில்லை. மனிதன் இயற்கையையே ஆள்பவனாக இருக்கிறான்.




## சோழர் கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்




சமய நம்பிக்கை சார்ந்த இன்றைய கோவில்கள் வழிபடும் மையங்களாகத்தான் பெரிதும் இருந்து வருகின்றன. ஆனால், இதற்கு மாறாக, இடைக்கால கோவில்கள். சமூக, பொருளியல், பண்பாட்டு மையங்களாக விளங்கின. கோவில் என்ற அமைப்பில் நேரடியாக தொடர்பு கொண்டிருந்த உடமை பிரிவினராயினும், மறைமுகமாக தொடர்பு கொள்ள வேண்டிய நிலையில் இருந்த உழைக்கும் கீழ் தட்டு பிரிவினராலும், ஏதோ ஒரு வகையில் வேண்டியோ, வேன்டாமலோ அதனுடன் பிணைக்கப்பட்டு கிடந்தார்கள்.

பிற்கால சோழர் ஆட்சி காலத்தில் கோயில் பொருளாதாரத்தில் அரசின் பங்கு மேலதிகமானது. மாபெரும் கோயில்கள் பலவற்றை அமைத்து, அவற்றிற்கு மிகுந்த சொத்துகளை அளித்து, மக்களோடு இயைந்த தனி நிறுவனங்களாக அவற்றை அன்றைய அரசர்கள் உருவாக்கினார்கள். தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் போன்ற இடங்களில் அமைந்துள்ள கோவில்கள் சோழ பெரு மன்னர்களால் அமைக்கப்பட்டவை.

நில உடமை முறை, நில உற்பத்தி, நீர் வளங்களை கொண்டிருத்தல், மிகை உற்பத்தியை பகிர்வு செய்து கொள்ளுதல் ஆகியவனவே கோயில் பொருளியத்தின் மையக் கூறுகளாகும். இந்த இடத்தில் கோவில் என்ற தனி அமைப்பு, நிறுவனமாக வளர்த்தெடுக்கப்பட்டவைக்கான பின்னணியும் பார்க்க வேண்டும். நீர் பாய்ச்சுதலின் தொழில்நுட்பம் அறிமுகமான பிறகு, நீர் வளங்கள் யாவும் ஒரு சில தனியாரிடம், கோயில் உள்ளிட்ட நில உடமையாளரிடம் சென்று விட்டதால் ஏற்பட்ட நில உரிமை மாற்றங்கள், அதனால் ஏற்பட்ட உற்பத்தி உறவுகள் ஆகியவனே சமூக பொருளியல் பண்பாட்டு நிலைமைகளில் எத்தகைய மாற்றங்களை உருவாக்கின என்பவை குறித்தெல்லாம் இந்நூல் பேசுகிறது. சோழர்கால நிலவுடைமைப் பின்புலத்தில் மக்கள் வாழ்நிலையில் கோவில் பொருளாதாரத்தின் தாக்கம் குறித்து நாம் அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

– இன்சுவை பாரதி

நூலாசிரியர் : மே.து. ராசுகுமார்
பக்கம் : 230 விலை : 320
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

## ஐரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகாளவிய அடிமை வணிகமும் காலனிய அடிச்சுவடுகளும்




தமிழகத்திலிருந்து ஐரோப்பியர்கள் நடத்திய உலகளாவிய அடிமை வணிகமும், காலனிய அடிச்சுவடுகளும் 1547 –1792 என்கிற இந்த நூல் எஸ். ஜெயசீல ஸ்டீபன் ஆங்கிலத்தில் எழுதி, கி. இளங்கோவன், புதுவை சீனு. தமிழ்மணி தமிழில் மொழிபெயர்த்துள்ள நூல் ஆகும்.

உலகம் முழுவதும் அடிமை வணிகத்தை ஐரோப்பியர்கள் மேற்கொண்டு இருந்தனர். சரக்கு மற்றும் பண்டங்களின் வணிகம் போல் இதுவும் ஒரு வணிகமாக அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இந்திய பெருங்கடலிலும், வங்காள விரிகுடாவிலும் அடிமை சந்தைகள் உருவானது குறித்து முறையான குறிப்புகள் இல்லை. ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்னர், தமிழக அடிமைகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஐரோப்பிய தனி நபர்களும் கிழக்கிந்திய நிறுவனங்களும் மனித உழைப்பின் மூலம் காலனிய பாட்டாளி வர்க்கத்தை அடிமைப்படுத்தியது. இதன் காரணமாக அடிமைகள் பரந்துபட்ட இடம்பெயர் செய்து, அவர்களை குடியமர்த்தி உள்ளது.

1621 –1665 ஆம் ஆண்டுகளில் டச்சு நிறுவனத்தால் பழவேற்காட்டில் இருந்து ஜகார்த்தாவிற்கு அடிமைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதை நூல் விளக்குகிறது. டச்சு ஆவணங்களில் இருந்து புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. போர்ச்சுக்கீசியரை எதிர்த்து தோற்கடிக்கப்பட்டவர்களை அடிமைகளாக கொண்டு சென்றனர். 1622 –1648 ஆம் ஆண்டுகளில் பழவேற்காட்டில் இருந்து ஜகார்த்தாவிற்க்கு ஏற்றுமதி செய்யப்பட்ட 1086 அடிமைகள் கடல் பயணத்தில் உயிர் இழந்துள்ளனர். 1638 –1679 ஆம் ஆண்டுகளில் பழவேற்காட்டில் இருந்து மியான்மர் நாட்டு சிரியம் என்ற ஊருக்கு டச்சு அடிமைகள் கப்பலில் ஏற்றுமதி செய்யப்பட்டதையும், டச்சு கிழக்கு இந்திய நிறுவனம் அடிமை வணிகத்திற்கு சட்டம் இயற்றியதையும் நம்மால் அறிய முடிகிறது.

1632 ஆம் ஆண்டில் டேனிஷ் அடிமை வணிகம் ஆரம்பமானது. பின்னர் தனியார் வணிகர்கள் அடிமைகளை கப்பல் மூலம் மலேசியா கெடா துறைமுகத்திற்கு ஏற்றுமதி செய்தனர். 1646–47 ஆம் ஆண்டுகளில் சுமத்ராவின் அச்சே விற்கு ஏற்றுமதி செய்தனர். தரங்கம்பாடியில் நடந்த அடிமை வணிகமுறையை லூத்ரான் மதப்ரப்பாளர்கள் ஜெர்மனியில் காணப்பட்ட அடிமை வர்த்தகத்துடன் ஒப்பிட்டு, உள்ளூர் வணிகர்கள் அடிமை முறையை எவ்வாறு மேற்கொள்கிறார்கள் என்பதை ஐரோப்பாவிற்கு எடுத்துக் கூறினர். 1753 ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் டேனிஷ் ஆளுநர் அடிமை தடையாணையை பிறப்பித்துள்ளார். எனவே தமிழ்நாட்டிலேயும் அடிமை வணிகம் முறையை ஐரோப்பியர்கள் புகுத்திருக்கிறார்கள் என்பதை இன் நூலின் மூலம் அறிய முடிகிறது.

– சமரன்

நூலாசிரியர் : டி. ராஜா, எஸ். ஏ. பெருமாள்,
பக்கம் : 26 விலை: 30
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50

சூழலும் உலகம்

# பிரிக்ஸ்–பிரிக்ஸ் பிளஸ்



மு.வீரபாண்டியன்

தென் ஆப்பிரிக்காவின் ஜோனஸ்பர்க்கில் பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15 வது மாநாடு நடைபெற்றது. இந்தியா, ரஷ்யா, சீனா, தென்னாப்பிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகள் இணைந்து பிரிக்ஸ் கூட்டமைப்பை முன்னெடுக்கின்றன.


தற்போது இதில் இன்னும் பல நாடுகளை இணைத்துக்கொள்ள, பிரிக்ஸ் பிளஸ் என அமைப்பை விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைய இதுவரை 40 நாடுகள் முன் வந்துள்ளன. இதில் இன்னும் பல நாடுகள் இணையலாம். முதலில் 22 நாடுகளை இணைத்துக்கொள்ள முடிவாகியுள்ளது. இதிலும் கீழ்காணும் ஆறு நாடுகள் முதல் கட்டமாக இணைகின்றன. அர்ஜென்டினா, சவுதி, எத்தோப்பியா, ஈரான், எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்.

மேற்கண்ட நாடுகள் பிரேசில் பிளஸ்ஸில் இணையுமேயானால், மக்கள் தொகை, ஜி.டி.பி, வர்த்தகம், தொழில்நுட்பம் என அமைப்பு கூடுதல் வலிமை பெறும்.

பிரிக்ஸ் பிரகடனம் படித்தால், பிரிக்ஸ் முக்கியத்துவம் உணர முடியும்.

1. ஒரு பொது வர்த்தக செலாணி முறை

இதுகார்ப்பரேட்நிறுவனங்கள் மேலாதிக்கத்திற்கு எதிராகவும், ஓர் குறைந்தபட்ச மார்க்கெட் சமத்துவத்திற்கும் வழிவகை செய்யும். குறிப்பாக ஒடுக்கப்பட்ட நாடுகளின் உற்பத்தி பொருட்களும் உலக சந்தைக்கு வர வழிவகைச் செய்யும் .




2. அந்தந்த நாடுகளின் நாணயத்தில் பரிவர்த்தனை அல்லது பிரிக்ஸ் கூட்டமைப்பின் பொது நாணயம், இதுகுறித்து நிறைவான முடிவு. பிரிக்ஸ் நாடுகளின் நிதி அமைச்சகம், நிதி செயலாளர்கள் முடிவு செய்வார்கள். இது யூரோ மற்றும் டாலர் ஆதிக்கத்தை தடுக்கும். வளர்முக நாடுகளின் தற்சார்பை வளர்க்கும்

3. ஓர் அவசரகால மருத்துவ முறைமை நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல். இது கொரோனா போன்ற காலங்களில் மேற்கு உலகைச் சார்ந்து நிற்கும் சூழலை தடுத்து, ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு, பகிர்ந்து கொள்ளுதல் என ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முறைகளை வளர்க்கும்.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் பொருளாதாரத்தில் மிக வலிமையாக சீனா இருப்பதால், அதன் மேலாதிக்கம் இருக்குமோ என்ற அச்சம் உண்டு.

அதற்குத்தான் ஓர் சமத்துவ முறையிலான பொது பரிவர்த்தனை முறை, யாரும், யார் மீதும் ஆதிக்கம் செய்யாத புதிய முறைமை.

உலக வங்கி, நேட்டோ,டாலர், யூரோ என உலக ஏகதிபத்திய, வல்லான்மை சூழலை எதிர்கொள்ள பிரிக்ஸ் மிக மிக அவசியம்.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் எத்தோபியா போன்ற ஏழை நாடுகளை சேர்ப்பதன் மூலம், பிரிக்ஸ் நாடுகளின் தொழில்நுட்பம், வர்த்தகம் என யாவும் பரவலாகும் வாய்ப்புகள் ஏற்படும். குறிப்பாக, தகவல் தொழில்நுட்பம், விண்வெளி ஆய்வு, செயற்கை நுண்ணறிவு மிக முக்கிய உதவிகள் சென்றடைய வாய்ப்புகள் உள்ளன.

இதில் மிக முக்கியம் பிரிக்ஸ் முன்மொழியும், ஓர் புதிய உலக ஒழுங்கு முறை தற்போதுள்ள உலக வங்கி, நிதி நிறுவனங்கள், நேட்டோ, ஐரோப்பிய கூட்டமைப்பு, புதிய பொருளாதார முறை என யாவும் பணக்கார நாடுகளின் விருப்பம் சார்ந்தவை. இவை யாவும் ஏகாதிபத்திய மேலாதிக்க முறை, இதற்கு மாற்று தான் புதிய உலக ஒழுங்கு முறை.

யுரேனியம், தங்கம அதிகம் உள்ள நைஜர் இதர ஆப்பிரிக்க நாடுகள் ஏன் வறுமையில் வாட வேண்டும்?

அதிக எண்ணெய் வளம் கொண்ட வெனிசுலா போன்ற நாடுகள் ஏன் பொருளாதாரத்தில் திணற வேண்டும்?

ஒரு நாடு ஏன் பல நாடுகளில் ராணுவ தளம் அமைக்க வேண்டும்?

ஐ.நா. சபை ஏன் இன்னமும் அமெரிக்க ஆதிக்கத்தில் இருக்க வேண்டும்?

மூன்றில் ஒரு பகுதி மக்கள் ஏன் இன்னும் வறுமையில் உழல வேண்டும் ?

இந்த கேள்விகள் எல்லாம் பிரிக்ஸ் பிரகடனத்தின் உள்ளடக்கம் . எனவே , பிரிக்ஸ் பிளஸ் எழுக !

# இடதுசாரிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள் லத்தின் அமெரிக்க நாடுகள் மேலும் சிவக்கிறது

லத்தின் அமெரிக்கா நாடான கவுத மாலாவில் நடைபெற்ற ஜனாதி பதி தேர்தலில் தி சென்டர்லெஃப்ட் மூவிமியன்டோ செமில் என்ற இடது சாரிக்கட்சியின் தலைவர் பெர்னார்டோ அரேவலோ டி லியோன் வெற்றி பெற்றுள்ளார்.

இதே போல் ஈகுவடார் நாட்டில் நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் இடதுசாரி குடி மக்கள் புரட்சி இயக்கத்தின் கோன்சா லஸ் 33.31 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி கண்டு இரண்டாம் கட்ட தேர்த லிலும் வெற்றிவாகை சூட தயாராகி வருகிறார்.

லத்தின் அமெரிக்காவில் அமெரிக்க ஆதரவு வலதுசாரி தலைவர்களால் ஆளப்படும் நாடுகளில் பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, வன்முறைகள்,இயற்கை வளங்களைச் சூறையாட அனுமதிப்பது என மக்கள் விரோத ஆட்சியாக நடத்தப்படுகிறது. இந்த அடிப்படை பிரச்சனைகளில் இருந்து நாட்டு மக்களை திசை திருப்பும் பொருட்டு வலதுசாரி ஆட்சியாளர்களின் ஆதரவு பெற்ற பல்வேறு போதைப்பொ ருள் கடத்தல் கும்பல்கள் மக்களை போதைக்கு அடிமையாக்கும் செயல்க ளை செய்து வருகின்றன.

இந்த வலதுசாரிகளின் ஆட்சிக்கு எதிராக அந்நாடுகளில் உள்ள இடதுசாரி, சோஷலிஸ்டு மற்றும் மையஇடது (சென்டர்லெப்ட்) உள்ளிட்ட இடதுசா ரிக்கட்சிகள் தொடர் போராட்டத்தையும் மக்கள் மத்தியில் தொடர் பிரச்சாரங்க ளையும் முன்னெடுத்து வருகின்றன.லத்தின் அமெரிக்க நாடுகளின் ஒவ் வொரு தேர்தலிலும் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் குறித்தான விவாதங்கள் முக்கிய இடத்தை பிடிக்கின்றன.

### பெர்னாண்டோ சுடப்பட்டார்

ஈகுவடார் தேர்தல் பிரச்சாரத்தின் போது பெர்னாண்டோ வில்லவிசென்சியோ போதைப் பொருட்கள் கடத்தல் கும்பல் கள் கட்டுப்படுத்தப்படும், இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார். பிரச்சாரத்தை முடித்து திரும்பும் பொழுது அவர் போதைப் பொருள் கடத்தல் கும்பலால் நாட்டின் தலைநகரிலேயே சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

தற்போது அவருக்கு மாற்று வேட்பா ளராக நிறுத்தப்பட்ட லூயிசா கோன் சாலஸ் எதிர்த்துநின்ற அந்நாட்டின் மிகப்பெரும் கோடீஸ்வர வேட்பாளரை விட அதிகவாக்குகள் பெற்று மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ளார்.

கவுதமாலாவில் நடைபெற்ற இரண்டா வது சுற்று ஜனாதிபதித் தேர்தலில் பெர்னார்டோ அரேவலோ டி லியோன் வெற்றி பெற்றுள்ளார்.இது லத்தின் அமெரிக்க நாடுகள் முழுவதும் வலதுசாரி களை மக்கள் தூக்கி எறிந்து மக்கள் நல திட்டங்களை முன்னிறுத்திச் செயல்படும் இடதுசாரித் தலைவர்களை தேர்ந்தெடுத்து வருகின்றனர் என்பதையே வெளிப்படுத்துகிறது.

## அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்க

# 18வது அகில இந்திய மாநாடு

அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க 18 வது அகில இந்திய மாநாடு மத்திய பிரதேசம் மாநிலம் ஜெபல்பூரில் ஆகஸ்ட் 20 முதல் 22 முடிய நடைபெற்றது. இந்தியா முழுவதிலுமிருந்து 600 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அகில இந்திய செயல் தலைவர் நாராயண ராய் தலைமையில் பொதுச்செயலாளர் சுக்தேவ் சிங் செயல் அறிக்கையை சமர்ப்பித்தார்.

ஜனநாயகக் குடியரசைப் பாதுகாப்போம், அரசியலமைப்பைப் பாதுகாப்போம், சுரண்டலுக்கு எதிராக களமாடுவோம், சமுதாய முன்னேற்றத்தில் இலக்கியத்தின் பங்கு, நவீன காலத்தின் நம்பிக்கை ஒளிக்கீற்றுகள், எழுத்தாளர்களின் இன்றைய கடமைகள் என்ற தலைப்பில் கருத்தரங்குகள் நடைபெற்றன. நாடெங்கிலும் இருந்து பல அறிஞர்கள் கலந்து கொண்டனர். அமைப்பு நிலைக் கருத்தரங்கமும் இறுதி நாளில் நடைபெற்றது.

முதல் நாள் மாலை ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்ற கலை இலக்கியப் பேரணி நடைபெற்றது. கவிஞர் ஹரிசங்கர்பர்சாய் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

இரண்டு நாட்களிலும் இசை நிகழ்ச்சிகளும், நாடகங்களும், நடனங்களும் அரங்கேற்றப்பட்டன.

இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆதரவாகவும், மத வெறிக்கு எதிராகவும், வெறுப்பு அரசியலுக்கு எதிராகவும், மணிப்பூர் மக்கள் பாதுகாப்பு, தேசிய பொது அமைதி பாதுகாப்பு உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆந்திர வழக்கறிஞர் பி.லெட்சுமிநாராயணா தலைவராகவும், பஞ்சாப் மாநில சுக்தேவ் சிங் மீண்டும் பொதுச் செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தமிழகத்திலிருந்தும் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். கலை இலக்கியப் பெருமன்ற மாநில துணைத் தலைவர் டி. எஸ். நடராசன் தேசிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். க. இ. பெ. மன்ற மாநில தலைவர் எஸ்.கே.கங்கா, செயலர் மருத்துவர் த. அறம் ஆகிய இருவரும் தேசிய குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.









# ஜபல்பூர் தேசிய மாநாட்டுப் பிரகடனம்!

முற்போக்கு எழுத்தாளர்கள் இயககத்தின் புகழார்ந்த பாரம்பரியம் மற்றும் மரபை உயர்த்திப் பிடிக்கும் இந்திய மொழி எழுத்தாளர்களான நாங்கள், 43 ஆண்டுகளுக்கு முன், ஜபல்பூர் நகரில் நடைபெற்ற முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் தேசிய மாநாட்டில் பங்கேற்ற போது, சோஷலிசம், மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயக இலட்சியங்களைப் பாதுகாத்திட உறுதி ஏற்றோம்.

முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் 18வது தேசிய மாநாட்டிற்காக ஜபல்பூரில் நாங்கள் மீண்டும் ஒன்றுகூடியிருக்கும் போது, நமது விடுதலைப் போராட்ட இயக்கம் உயர்த்திப் பிடித்த அரசியலமைப்பு சட்டத்தால் பாதுகாக்கப்பட்டு வரும் விழுமியங்களான சமத்துவம், மதச்சார்பின்மை மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டிய புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, இன்றைய காலகட்டத்தில் இந்திய ஜனநாயகம் ஒரு சிக்கலான நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. இந்த நூற்றாண்டில், குறிப்பாகச் சொல்வதானால், கடந்த பத்து ஆண்டுகளில், பகுத்தறிவு, பன்மைத்துவம், அறிவியல் சிந்தனை மற்றும் முற்போக்கு பார்வை ஆகியவை பின்னுக்குத் தள்ளப்பட்டு பிற்போக்கான, பெரும்பான்மைவாத, மூடநம்பிக்கை மற்றும் பழமைமீட்பு கருத்தியல்கள் உயர்த்திப் பிடிக்கப்பட்டு நிறுவனமயமாக்கப்பட்டு வருகிறது.

மதச்சார்பற்ற ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மதவாத அரசாக மாறி வருகிறது என்பதற்கான தெளிவான சமிக்ஞைகள் தென்படுகின்றன. அறிவுச் சூழல் அழிக்கப்பட்டு, அரசியலமைப்பின் பாற்பட்ட அமைப்புகள் அடிபணிய வைக்கப்பட்டுள்ளன. கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், பொதுத்தளங்கள் என்று அனைத்து தளங்களிலும் சுதந்திரமான கருத்து பரிமாற்றத்திற்கான வாய்ப்பு சுருக்கப்பட்டு வருகிறது.

இந்தியச் சமூகத்தின் பல்வேறு மொழிகள், பன்மைத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பண்பாட்டு வளத்தைப் புறந்தள்ளிவிட்டு, குறுகிய, ஒற்றைத்தன்மை கொண்ட சமூகமாக இந்தியச் சமூகம் மாற்றப்பட்டு வருகிறது. புத்தர், பசவன்னா மற்றும் கபீர் என்னும் நீண்ட பாரம்பரியம் அழிக்கப்பட்டு வருகிறது. காந்தி, நேரு மற்றும் அம்பேதகர் ஆகியோரின் புகழ், தவறான கற்பிதங்கள் மூலம் களங்கப்படுத்தப்படுகிறது.

கார்ப்பரேட் மற்றும் முதலாளித்துவ சக்திகளுடனான இந்துத்துவ அரசியலின் வெளிப்படையான நேரடி கூட்டணி மிகவும் கவலையளிப்பதான விடயமாகும். இத்தகைய சலுகைசார் முதலாளித்துவத்தில் இருந்து தான் பாசிசத்தின் உள்நாட்டு வடிவமான எதேச்சதிகார ஆட்சிமுறை உருப்பெறுகிறது. எனினும், அதன் உற்பத்தி ஸ்தானம் மற்றும் செயற்படுமுறை ஆகியன ஹிட்லரின் நாசிசத்தில் இருந்தே உத்வேகம் பெறுகின்றன.

ஜனநாயக கட்டமைப்புகளில் ஒரு நெருக்கடி எழுந்துள்ளது. அதற்கு எடுத்துக்காட்டாக, கருத்து சுதந்திரம் நசுக்கப்படுவதும், அதனை எதிர்த்து நடைபெறும் போராட்டங்களையும் குறிப்பிடலாம். இந்தக் காலச் சூழலில் தான், எண்ணற்ற அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் மற்றும் அருட்தந்தை ஸ்டேன் சுவாமி ஆகியோர் வீரமரணம் எய்தினர். விசாரணை என்ற பெயரில் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் மற்றும் இதர மனித உரிமை அமைப்புகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, அவற்றின் செயல்பாடுகள் பலவந்தமாக முடக்கப்பட்டன.

1990களில், தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலக முதலாளித்துவத்தால் உந்தித் தள்ளப்பட்ட பொருளாதார கொள்கைகள், ஏழ்மைக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிகோலியது. வேலைவாய்ப்பின்றி, அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளைக் கூட நிறைவு செய்துகொள்ள முடியாமல் நமது நாட்டின் 80 கோடிக்கும் அதிகமான மக்கள் போராடி வருகிறார்கள்.

கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான பொறுப்புகளில் இருந்து அரசு ஒதுங்கிக் கொள்கிறது. மத்தியதர வர்க்கத்தினரின் மீது அவசியமற்ற, அதீத வரி விதிக்கப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம், அதன் உச்சத்தைத் தொட்டுவிட்டது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரித்துள்ளது.

இளைய தலைமுறையினரின் வருங்காலம் அபாயத்திற்கு உள்ளாகி இருக்கிறது. அரசியலமைப்பு சட்டம் வகுத்தளித்த 'மக்கள் நல அரசு' எனும் கருத்தியல் கைவிடப்பட்டு ஒட்டுமொத்த தேசமும் ஒரு வணிக திட்டத்தின் வடிவமாக மாற்றப்பட்டு வருகிறது.

நீதித்துறை மற்றும் தேர்தல் ஆணையம் போன்ற அரசியலமைப்பின் பாற்பட்ட அமைப்புகளும் குறிவைத்து தாக்கப்படுகின்றன; பலவீனப்படுத்தப்படுகின்றன. அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களின் பெரும்பகுதி, செயலூக்கம் இழந்து, கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. சமூக ஊடகங்களும் தற்போது பலத்த கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரமடைந்துள்ளன.

உண்மையான பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக ஹிஜாப், பசு பாதுகாப்பு, கங்கை, கீதை மற்றும் லவ் ஜிஹாத் போன்றவை எழுப்பப்படுகின்றன. மதம், சாதி மற்றும் தனிநபர் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தைப் பிளவுபடுத்த அனைத்து விதமான தந்திரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. அது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் கயவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பளிப்பதைப் பார்க்கிறோம்.

ஆளும் வர்க்கத்தினுடைய மைய சித்தாந்தத்தின் செயல்திட்ட வடிவமாக 'இந்து பழமைவாத மீட்டெடுப்பு' தற்போது முதன்மை பெற்றிருப்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் இந்து மதகுருமார்களால் 'செங்கோல்' நிறுவப்பட்டிருப்பது, அயோத்தியில் ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்டும் மத சம்பிரதாய நிகழ்வில் நாட்டின் பிரதமர் பங்கேற்றிருப்பது ஆகியவை அத்தகைய செயல்திட்டத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

தலித்துகள், பழங்குடி மக்கள் மற்றும் பெண்கள் மீது அதிகரிக்கும் வன்கொடுமைகள் ஆகியவை பெரும்பான்மைவாத மனுவாத சித்தாந்தத்தின் இயல்பான விளைவுகள் ஆகும். இதனை உனா, ஹத்ராஸ் தொடங்கி பீமா கோரேகான் வரையில் அறிந்து உணர முடியும்.

கடந்த பத்தாண்டு காலமாகவே, மேற்கூறிய சூழல்களை, நாம் நமது போராட்ட உணர்வுபோதத்துடன் எதிர்கொண்டு வருகிறோம். கருத்து சுதந்திரம் மற்றும் அரசியலமைப்பின் பாற்பட்ட ஜனநாயகத்தைப் பாதுகாத்திடுவதே இன்றைய நமது முழுமுதற் கடமை ஆகும். இந்த நோக்கத்திற்காக, எழுத்தாளர்கள் சங்கங்களின் ஒரு ஐக்கிய முன்னணியைக் கட்டமைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 02.09.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

CPI

### மாநிலம் தழுவிய மாபெரும்

# தொடர் மறியல் போராட்டம்

### செப்டம்பர் - 12, 13, 14.

- விலைவாசி உயர்வுக்கு காரணமான
- வேலையின்மையை அதிகரித்துள்ள
- மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கிற
- சொந்த லாபங்களுக்காக நாட்டை விற்கிற
- இந்தியைத் திணித்து, தமிழைப் பழிக்கிற

## பாஜகவே ஆட்சியை விட்டு வெளியேறு!

## ஆதரிப்பீர்! பங்கேற்பீர்!

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.